# ஸ்ரீ விவேகசூடாமணியும் ஸ்ரீ சத்குருவின்

## எளிய விளக்கமும்



## பூஜ்யஸ்ரீ சத்குரு

## தூளி பாபா

ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை!

# ஸ்ரீ விவேக சூடாமணியும் ஸ்ரீ ஸத்குருவின் எளிய விளக்கமும்



தூளி பாபா

வெளியீடு :
**அன்பின் குடில் நிர்வாகம்,**
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,
அந்தியூர் தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,
தமிழ்நாடு - 638 311
தொலைபேசி : 04256 - 227655
அலைபேசி : 94439 63060

முதல் பதிப்பு : 19.01.2019 ஸ்ரீஸத்குருதேவரின்
3ம் ஆண்டு மஹா சமாதி தினம்

பிரதிகள் : 500

அட்டைப்படம் : திருமந்திர நகரில் ஸ்ரீவேதவியாசரின் அம்சமான நமது பரமகுரு ஸ்ரீவடிவேல் ஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீசுக பிரம்ம மஹரிஷியின் அம்சமான நமது ஸ்ரீஸத்குருதேவர் தூளி பாபா ஆகிய இரண்டு ஞானிகள் வாழ்ந்த இல்லமான பூலோக வைகுண்டம்.

அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்
பெங்களூர் - 560 003
தொலைபேசி : (080) 23346025

# பொருளடக்கம்


முன்னுரை .................... v

1. ஸ்ரீ பிரம்ம நிஷ்டையின் பெருமை .................... 1

2. மனுஷ்ய ஜன்மாவின் தன்மை .................... 2

3. ஞானம் அடைய வழி .................... 4

4. நான்கு வகை சாதனங்கள் .................... 5

5. ஸ்ரீஸத்குருவின் அடையாளங்கள் .................... 8

6. உண்மை சீடன் வினாவுதல் .................... 9

7. சிஷ்யனைப் பெருமைப்படுத்துதல் .................... 11

8. உபதேச முறை .................... 14

9. மாயா நிரூபணம் .................... 21

10. காரண சரீரம் .................... 24

11. ஆத்ம நிரூபணம் .................... 25

12. அறியாமை .................... 27

13. பஞ்ச கோசங்கள் .................... 29

14. ஆத்ம ஸ்வரூபம் .................... 36

15. மஹாவாக்கிய ஆராய்ச்சி .................... 41

16. பிரம்மத் தியானம் .................... 44

17. வாஸனாக்ஷயம் ........................................ 48
18. ஆத்மநிஷ்டை கூடும் முறை ........................................ 57
19. அடிப்படை பொருள் விளக்கம் ........................................ 60
20. ஸமாதி விளக்கம் ........................................ 61
21. வாக்கை மனதில் அடக்கு ........................................ 64
22. மனதை புத்தியில் அடக்கு ........................................ 65
23. புத்தியை பிரத்யேக ஆத்மாவில் ஒடுக்கு ........................................ 66
24. தியானம் செய்யும் முறை ........................................ 68
25. ஆத்ம சிந்தனை ........................................ 72
26. காணும் உலகை கழித்தல் ........................................ 73
27. ஞானத்தின் பயன் ........................................ 74
28. ஜீவன்முக்தன் லக்ஷணம் ........................................ 76
29. பிராப்தம் ........................................ 80
30. ஆத்மானுபவம் ........................................ 85
31. ஞான விழிப்பு ........................................ 87
32. உபதேச முடிவு ........................................ 91
33. பூர்த்தி ........................................ 101
34. நூலின் சிறப்பு ........................................ 102

**எல்லாம் நீ!**

**ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை!**

**திருவடி சரணம்! குருவடி சரணம்!**

**ஸ்ரீபாகவத பரப்பிரம்மனே நமஹ: |**

**ஸ்ரீகுரு பிரம்மா குரு விஷ்ணு**
**குரு தேவோ மஹேஸ்வரஹ: |**
**குரு சாக்ஷாத் பரப்பிரம்மம்**
**தஸ்மை ஸ்ரீகுருவே நமஹ: ||**

அருள்ஞானக் குழந்தைகளே!

அவன் அருளால் அவன் தாள் வணங்கி என்றபடி ஸ்ரீஸத்குரு கிருபையால் ஸ்ரீஜகத் குருவாகிய ஸ்ரீஆதிசங்கராச்சார்ய ஸ்வாமிகள் உபதேசித்த ''**ஸ்ரீவிவேக சூடாமணி**'' என்ற ஞானத்தின் திறவுகோலை ஸ்ரீஅவர்கள் திருவடி அருளால் உணர்வீர். காண்பதில் கேட்பது நன்று. கேட்பதில் உறுதி பூணுவது நன்று. உறுதியில் நிலைத்து நிற்பது நன்று. நிலைத்து நின்றால் சுய அனுபூதி கூடி அது, தான் ஆகலாம். தான் ஆன தன்மை தனித்த மெய்ஞானம் ஆகும். இதை உள்ளபடி உணர்ந்தால் அதுவே நீங்களும் ஆகலாம்.

ஸ்ரீகுரு அருள் வழி நடத்தும்.

ஸ்ரீதிரு அருள் கூட்டி வைக்கும். இது உறுதி.

**எல்லாம் நீ!**

**ஸ்ரீ பிரம்மம் ஸத்யம். ஜகத் மித்யை.**

ஸ்ரீ ஸத்குரு திருவடி சரணம்!

## 1. ஸ்ரீ பிரம்ம நிஷ்டையின் பெருமை.

ஞானக் குழந்தைகளே!

வாக்குக்கும் மனதிற்கும் எட்டாதவரும், எல்லா வேதங்களின் முடிவான சித்தாந்தத்தை வாக்கியங்களிலிருந்து தெளிந்து, அதை தீக்ஷண்ய புத்தியால் உணர்ந்தவரும், ஸ்ரீசத் சித் ஆனந்த ஸ்வரூபியும், ஸ்ரீஸத்குருநாதனாகியும் பிரகாசிக்கும் ஸ்ரீகோவிந்த பகவத்பாதரை வணங்குகிறோம். ஸ்ரீகோவிந்தம் என்பது ஸ்ரீபகவானையும், ஸ்ரீசங்கராச்சாரியரின் குருவான ஸ்ரீகோவிந்த பகவத்பாதரையும் குறிக்கும். இந்த வசனம் ஸ்ரீகுரு வணக்கமாகவும் ஸ்ரீதெய்வ வணக்கமாகவும் அமைகிறது. ஸ்ரீஸத்குருவால் ஸ்ரீதெய்வத்தை அறிந்து, தெய்வத்தின் அருளால் ஸ்ரீஸத்குருவும் தெய்வமும் ஒன்றென உணர்ந்து, இரண்டும் ஒன்றென்ற வாக்கியார்த்தத்தையே லக்ஷியார்த்தமாக கொண்டு உண்மை ஞானத்தை உணர்ந்து கரைதலே **ஸ்ரீபிரம்ம நிஷ்டையாகும்.**

**எல்லாம் நீ!**

## 2. மனுஷ்ய ஜன்மாவின் தன்மை

எல்லாப் பிறப்புகளிலும் மானிடராய் பிறப்பது அரிது. அதனினும் ஆணாகப் பிறத்தல் அரிது. அதனினும் பிரம்மத்தை உணர்ந்த பிராமணனாய் பிறத்தல் அரிது. அதனினும் வினையின் தன்மையால் கூன், குருடு, செவிடு, பேடு (அலி) நீங்கி புனிதனாய் பிறத்தல் அரிது. அதனினும் வேதத்தின் அந்தத்தை உணர்தல் அரிது. அதனினும் தன்னை ஸ்ரீ ஆத்மாவாக உணர்ந்து அனாத்ம வஸ்துக்களை பிரித்தறிதல் அரிது. தனதாத்ம ஸ்வரூபத்தில் நிலைபெற்று சுயானுபூதி கூடி **ஸ்ரீபிரம்மசாக்ஷாத்காரம்** எய்துதல் அரிது.

இந்த நிலை கூடுவதற்கு பல கோடிப் பிறவிகளில் செய்த புண்ணியமும், அப்புண்ணியத்தால் ஸ்ரீஸத்குரு அருளும், அவர் அருளால் ஸ்ரீதெய்வ தரிசனமும், ஸ்ரீகுருவும் ஸ்ரீதிருவும் ஒன்றான தன்மையில் ஸ்ரீசத் சித் ஆனந்த நிலை பெறமுடியும். மனிதப் பிறவியும், முக்தியில் ஆசையும், ஸ்ரீமஹாபுருஷர்களை நாடி அடைதலும் அரிதற்கரிதாகும். ஸ்ரீபிரம்மத்துடன் ஒன்றுபட்ட நிலை அடைந்தவன் திரும்ப மோஹத்தில் அழுந்தமாட்டான். மனிதப் பிறவியில் ஆயிரத்தில் ஒருவனுக்கு முக்தியில் ஆசை வருகிறது. அவர்களில் ஆயிரத்தில் ஒருவனுக்கு தானான உண்மை உணர்வு கிட்டுகிறது.

நமக்கு ஒரு வருஷம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள். அப்படி அவர்கள் வருஷத்தில் 12,000 கொண்டது ஒரு சதுர்யுகம் (கிருத, திரேதா, துவாபர, கலியுகங்களாகும்). அப்படி ஆயிரம் சதுர்யுகம் கொண்டது பிரம்மாவுக்கு ஒரு பகல். அப்படி ஆயிரம் சதுர்யுகம் கொண்டது பிரம்மாவுக்கு ஓர் இரவு. அப்படி நூறு வருஷம் பிரம்மாவின் ஆயுள் என கணக்கிடப்படுகிறது. ஆனால் ஞானிகளுக்கு ஆயுள், அதாவது காலம் கணக்கில்லை.

**எல்லாம் நீ!**

## 3. ஞானம் அடைய வழி

குழந்தைகளே!

வெளிப் பொருள்களில் உள்ள சுக துக்கத்தை துறந்தவனாய், ஸ்ரீமஹாத்மாவாகிய ஸ்ரீஸத்குருவை அடைந்து முறைப்படி சேவை (சர்வாங்க சேவை, சத்பாவ சேவை, ஆத்மபாவ சேவை) செய்து, அவரால் உபதேசிக்கப்பட்ட பொருளில் சித்தத்தை நிலைநிறுத்தி, விதேக முக்தியில் முயற்சி செய்ய வேண்டும்.

தெளிவான விவேகத்துடன் ஸ்ரீஸத்குரு உபதேசித்த ஸ்ரீஆத்ம தியானத்தில் நிலை பெற்றவனாய், இந்திரியங்கள் நாடும் பொருள்களில் பற்றில்லாமல், எதேச்சையாய் வரும் கர்மாவை மட்டும் விருப்பு வெறுப்பு அற்ற தன்மையில் செய்தவனாய் தன்னிலையில் தான் உவகையுடன் இருக்க வேண்டும். மனதின் தூய்மைக்காக செய்யப்படும் கர்மங்கள் நீங்கலாக, ஆசை வசப்பட்டு செய்யும் கர்மங்கள் செய்யக்கூடாது. பழுதையை (கயிறு) பழுதையாக காண்பது சுத்த அறிவு. பழுதையைச் சர்ப்பமாக காண்பது மதி மயக்கத்தால் ஏற்பட்ட பிரமை. உண்மையை உணர்த்தும் உயர் நிலையை ஸ்ரீமஹான்களின் உபதேசக் கருத்தால்தான் உணர முடியுமே தவிர தானம், தருமம், தீர்த்தம், வழிபாடு முறைகளால் உணர முடியாது.

## ௪. நான்கு வகை சாதனங்கள்

1. நிலைபெற்றதும் நிலையற்றதுமான பொருள்களை பகுத்து அறியவேண்டும். அதாவது தோற்றி, இருந்து, மறையும் பொருள்கள் நிலையற்றதாகும். எக்காலத்திலும் எங்கும் நிறைந்திருப்பது ''நிலை'' உள்ளதாகும்.

௨. மரணத்தின் பின் சொர்க்க லோகாதிபத்தியங்களில் ஏற்படும் இன்ப நுகர்ச்சிகளில் பற்று இல்லாதிருக்க வேண்டும், அதாவது பத முக்தியில் இச்சை அற்றிருக்க வேண்டும்.

௩. சமத்வம், சம திருஷ்டி, சம பாவனை, சாந்தி, உறுதி, சிரத்தை. இந்த ஆறும் பெற்றிருக்க வேண்டும்.

௪. ஸ்ரீஆத்ம தரிசனத்திலேயே சர்வசதா காலமும் மனம் அழுந்தி கரைய வேண்டும். இந்த நான்கு சாதனங்களும் ஒரு ஞானியின் லக்ஷணமாகும்.

இந்த உடல் தொடங்கி பிரம்மாவின் உடல்வரை நிலை இல்லாதது என உணர்ந்து, அது அனுபவிக்கும் இன்ப நுகர்ச்சியில் பற்றில்லாமல், போதும் என்ற நிறைவு பெறுதல் வேண்டும். தன் சுயானுபூதியாலும் ஸ்ரீகுரு வாயிலாக கேட்டு உணர்வதாலும் இதை பெறமுடியும். ஞானேந்திரியங்களாகிய மெய், வாய், செவி, மூக்கு, கண் இவைகளின் வாயிலாக கிரஹிக்கும் உணர்வு, ருசி, சப்தம், நுகர்வு, பார்வை இவைகளை

விஷம் எனக் கருதி அவைகளில் நாட்டம் இல்லாமல், அதன் காரண காரியத்தை விசாரியாமல் பொருள் அற்ற தன்மையில் இருக்கப் பழகவேண்டும்.

கர்மேந்திரியங்களாகிய வாக்கு, கை, கால், பாயு (மலத்துவாரம்), குறி, இந்த ஐந்தின் வாயிலாக நடக்கும் கர்மாக்கள் யதேச்சையாக வருவதை பற்றில்லாமல் செய்து மனதின் வியாபாரமாகிய வெளிப் பொருள்களில் பிடிப்பு நீங்கி, அவைகளைப் போக்கும் வழியைத் தேடாமல், கவலையும் இல்லாமல், அமைதியாக பொறுத்துக் கொள்ளுதல் **திதீக்ஷை** என்று சொல்லப்படும்.

ஞானசாஸ்திரத்தின் உண்மையிலும், ஸ்ரீஸத்குரு உபதேசத்தின் உண்மையிலும், இவை சத்தியம் என உறுதி நிச்சயம் செய்யப்படும் புத்திக்கு சிரத்தை என்று சொல்லப்படும். சஞ்சலமானதும் நிலையற்றதுமான மனது, எந்தெந்த காரணத்தைப் பற்றி வெளியில் செல்லுமோ, அதைத் தடுத்து நிறுத்தி தனதாத்மாவிடத்திலேயே லயமாக்கி வைக்க வேண்டும். அஹங்காரத்தினால் (நான், எனது) இயங்கும் தேகத்தை அறியாமையினால் உண்டாகிய கற்பனையாகிய தளைகளின் ரூபத்தை அறிந்து கொண்டு, அந்த தளைகளினின்று விடுபடுவது **முமுக்ஷுத்வம்** எனப்படும்.

முக்தியில் அவாவாகிய முமுக்ஷுத்வம் தீவிரமில்லாமல் நடுத்தர வடிவிலோ, மந்த வடிவிலோ இருந்தாலும், வைராக்கியத்துடன் உறுதியான நம்பிக்கையும் ஸ்ரீஸத்குரு

அருளும் கூடி இருந்தால், அந்த முமுக்ஷுத்வம் வளர்ச்சி அடைந்து நல்ல பலனைக்கொடுக்கும். காக்கையின் எச்சத்தைப்போல் போகபோக்கியத்தில் சகிக்க முடியாத வெறுப்பு **தீவிர வைராக்கியம்** எனப்படும்.

ஸ்ரீஆத்மாவில் பரமானந்தரூபம் விளங்காவிட்டால் அதில் சிறந்த அன்பு உண்டாகாது. விளங்கி விட்டால் விஷய சுகங்களில் விருப்பம் உண்டாகாது. மோக்ஷத்திற்கான சாதனங்களில் **பக்தி**யே சிறந்தது. **தனது உண்மையான ஸ்வரூபத்தை தொடர்ந்து சிந்தித்தலே பக்தியாகும்**. பக்தி சாஸ்திரம், ஸ்ரீபகவானிடத்தில் செய்யும் அன்பை 'பக்தி' எனக் கூறும். அத்வைத சாஸ்திரம் 'ஸ்ரீஆத்மானுபவத்தையே பக்தி' எனக் கூறும். இரண்டிற்கும் முரண்பாடில்லை. உள்ளத்தில் உறையும் ஸ்ரீஆத்மாவே ஸ்ரீபகவானாகும்.

இதையே கீதையில் ஸ்ரீபகவான் கூறுகிறார்: பார்த்தா! எல்லா உடல்களிலும் எம்மையே ஸ்ரீஆத்மாவாக அறிவாயாக என்கிறார். அடுத்து பக்தியால் ஆத்மாவாக தன்னை உணர்ந்தவன், எம்மையும் எம் தன்மையையும் (மாயை) உண்மையில் உணர்கிறான். எல்லா இடத்திலும் பற்றில்லாதவனாய் அந்தந்த நன்மை தீமைகளை அடையும் காலத்து மகிழ்ச்சியால் பூரிப்பதும் இல்லை, துக்கத்தால் சோர்வதும் இல்லை. அவன் ஞானம் உறுதி பெற்றதாகும். அவனே **திடப்பிரக்ஞன்.**

## 5. ஸ்ரீஸத்குருவின் அடையாளங்கள்

குழந்தைகளே!

வேதத்தை நன்கு கற்றுணர்ந்தவரும், பாவமற்றவரும், ஆசை வசப்பட்டு அழியாதவரும், பிரம்மத்தினிடையே தன்னைக் கரைத்தவரும், விறகில்லா நெருப்புப் போல் சர்வசதா காலமும் சாந்தியும் அமைதியும் மௌனமும் உள்ளவரும், கடல்மடை போல் கருணை உள்ளவரும், தன்னை வணங்கும் நல்லவர்களுக்கு உறவினரும் எவரோ அவரே **'ஸ்ரீஸத்குரு'** ஆகும்.

ஸ்ரீஸத்குருநாதனை பயபக்தியுடன் நமஸ்கரித்து, அடக்கம், சேவை, முதலியவற்றால் பூஜித்து, அவர் சந்தோஷமாக இருக்கையில் அவரை அண்டி, தான் உணர்ந்து கொள்ள வேண்டியதை கேட்டுக் கொள்ள வேண்டும். ஸ்ரீமஹான்களும் சாதுக்களும் தன்னை உலகிற்கு காட்டிக் கொள்ளமாட்டார்கள். அதனால் உலகில் சாதுக்களே இல்லை என முடிவு செய்து விடக்கூடாது. அந்தக் காலத்தில் மஹான்கள் இருந்தார்கள், இந்த காலத்தில் ஸ்ரீமஹான்கள் இல்லை என சிலர் எண்ணுகிறார்கள், அது தவறாகும். ஸ்ரீமஹான்கள் எல்லாக் காலங்களிலும் இருக்கிறார்கள், அவர்களைக் கண்டுகொள்ள நமக்குப் போதிய அறிவும், உண்மையான அவாவும் இல்லாததுதான் காரணமாகும்.

# 6. உண்மை சீடன் வினாவுதல்

ஸ்ரீகுருதேவரே! கருணை கூர்ந்து கேட்டருளும். உமது திருவடிகளில் பணிந்து சென்னிசூடி நமஸ்கரிக்கிறோம். உம் சேயாகிய எம் மீது பரிவுகொண்டு எம்மை ஆட்கொள்ளும். பிறவிக்கடலில் வீழ்ந்துள்ள எம்மை களங்கம் அற்றதும், அமுதம் பொழிவதுமான உம் கடைக்கண் பார்வையினால் கரையேற்றிவிடும்.

தடுக்கமுடியாத பிறவித் துன்பமாகிய காட்டுத் தீயால் தபிக்கப்பட்டு, காமக் குரோதாதி சர்ப்பத்தால் கடிபட்டு, அலைக்கழிந்து உமது சரணாரவிந்தத்தை புகலிடமாக பற்றினோம். ஓ பிரபுவே! ஸ்ரீபிரம்மானந்த ரஸத்தை அனுபவித்து பரிசுத்தமானதும் மிகவும் குளிர்ச்சியானதுமான தங்களது வாக்காகிய கலசத்திலிருந்து பெருகியதும், ஞானாமிர்தமாகிய அமுத மொழிகளால் எம் பிறவித் துன்பமாகிய காட்டுத் தீயை சாந்திபடுத்தி அணைத்துவிடுங்கள். தங்களுடைய கருணையின் பார்வை, அடியேன் மீது பட நாம் பெற்ற பாக்கியமே பாக்கியம்.

ஓ ஸத்குருவார்யா! தேவதேவா!!

பிறவிக் கடலாகிய இதை நாம் எப்படி கடப்போம்? எமக்குச் செல்லும் வழி ஏது? நாம் கைக்கொள்ள வேண்டிய உபாயம்

என்ன? இந்த பிறவித் துன்பத்தை ஒழித்து எம்மை ரக்ஷியுங்கள். பல சாஸ்திரங்கள் பல வழிகளைக் கூறுகிறது. ஒரு நோயாளிக்கு எந்த மருந்து கொடுக்க வேணுமென்று வைத்தியருக்குத்தான் தெரியும். அதுபோல் எம் பிறவிப் பிணியைப் போக்க தாங்களை அன்றி வேறு கதி இல்லை.

**எல்லாம் நீ!**

# 7. சிஷ்யனைப் பெருமைப்படுத்துதல்

குழந்தாய்!

நீ பாக்கியசாலியாகிறாய். செய்ய வேண்டியதை செய்தவனாகிறாய்! இதனால் உன் வம்சம் புனிதமாகும். அறியாமையாகிய தளைகளினின்று விடுபட எத்தனிக்கிறாயல்லவா? உன்னால் கேட்கப்பட்ட இந்த கேள்வியே சாலச் சிறந்ததாகும். அறிய வேண்டிய ஞானம் எல்லையில்லாதது, ஆனால் காலம் குறைவு. இடையூறுகள் பல, எது யுக்தமானதோ அதை மட்டும் உணர்த்துகிறோம். நீர் கலந்த பாலில் இருந்து பாலை மட்டும் ஹம்சம் கிரஹிப்பது போல, உண்மையை மட்டும் தருகிறோம் உணர்க. **முக்திக்கு முதன்மையான படி,** யாம் சொல்லும் வாக்கியார்த்தத்தையே உன் லக்ஷியார்த்தமாக கொள்ளவேண்டும். உள்ளத்து உறுதியுடன் கிரஹிப்பாயாக.

1. நிலையில்லாத பொருள்களின் மீது உள்ள பற்றை விட வேண்டும்.

2. அகக்கரண அடக்கம்,

3. புறக்கரண துறவு ஆகியவை முக்கியமாகும்.

தந்தையின் கடனை தீர்த்து விடுவதற்காக புத்திரன் இருக்கிறான். ஆனால் அறியாமையின் தளைகளை நீக்குவதற்கு

தன்னையன்றி வேறு எவனும் இல்லை. தலையில் சுமக்கப்பட்ட பாரத்தை வேறொருவர் வாங்கிக் கொள்ளலாம். ஆனால் பசியோடிருப்பவன் தன் பசியைப் போக்க அவன்தான் உண்ண வேண்டும். பிறர் உண்டால் அவன் பசி தீராது. அதைப்போல தன் பிறவிப் பிணியை உத்தம வைத்தியரின் மூலமாக (ஸ்ரீஸத்குரு), அவர் கொடுக்கும் மருந்தை, சிரத்தையாக உண்டால்தான் தன் பிறவிப்பிணி நீங்கும். குழந்தைக்காக தாய் மருந்து சாப்பிட்டால் குழந்தை வியாதி நீங்கும், அது உண்மை தான். அந்த குழந்தை தாய்ப் பாலைத் தவிர வேறு எதுவும் அருந்தாத வரையில்தான் அது பொருந்தும். புட்டிப் பாலையும் மற்றும் உணவுகளையும் உண்ணும் குழந்தைக்கு, தாய் சாப்பிடும் மருந்தால் ஒரு பிரயோஜனமும் இல்லை.

ஸ்ரீபகவான், ஸ்ரீஸத்குரு, ஸ்ரீஅடியார்கள் அருள் இருந்தாலும், **'தான் முக்தி அடைய வேண்டும்'** என்ற ஆர்வம் உனக்கு இருந்தால்தான் உண்மை ஞானம் உணர முடியும். நீ மாம்பழங்களை சாப்பிட வந்தவன், கொடுக்கும் பழத்தை மட்டும் சுவைத்துச் சாப்பிடு. அதனால் உன் பசி அடங்கும். தூக்கம் வரும். அதை விடுத்து, எத்தனை மரங்கள்? என்ன ஜாதி மரங்கள்? பூவின் தன்மை என்ன? இலையின் தன்மை என்ன? என கணக்குப் பார்ப்பதால் பசி அடங்குமா? அத்தன்மைபோல் தூலத்தின் சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்வதும், இந்த துன்பம் எப்படி வந்தது? இது நமக்கு வரலாமா? இந்த குழந்தை இப்படி பேசலாமா? என்றும், இந்த மந்திரம் ஜபித்தால் எது சித்தியாகும்? இதை ஓதினால் என்ன பலன் கிடைக்கும்? என்ற உன் கற்பனையினால் உலகம்தான் விரியும்.

நிர்விகாரியான உனக்கு விவகாரம் ஏன்? குணாதீதனான உனக்கு பேதம் ஏன்? நிர்ச்சங்கனான உனக்கு சலனம் ஏன்? நிராமயனான உனக்கு நாமரூபம் ஏது? சுத்த ஆத்மாவாகிய உனக்கு அனாத்ம வஸ்துக்கள் மீது பற்று ஏன்? என உணர்ந்து கரைதலே பழம் சுவைத்து புசிப்பதாகும். ஆசையும், பயமும், கோபமும் இல்லாதவன் எவனோ, அவன் ஜீவன்முக்தனே. விலக்க வேண்டியதை விலக்கினால், அடைய வேண்டிய நிலை தானே வருகிறது.

**எல்லாம் நீ!**

# ८. உபதேச முறை

குழந்தாய்!

1) கொடிய விஷமாகிய இந்திரிய வழியில் செல்லும் புத்தி கலக்கமுடையவன் ஒவ்வொரு அடியிலும் காலன் தொடர்ந்தே வருகிறான். முக்தியில் விருப்பம் உள்ள நீ, முதலில் விஷய ஆசையை ஒழித்துவிடு.

2) உடலை போஷிப்பதில் பற்றுடையவனாக இருந்துகொண்டு, எவன் ஆத்மாவை காண ஆசைப்படுகிறானோ, அவன் ஓர் முதலையை தெப்பக்கட்டையாக பற்றி நதியைக் கடக்க முயல்கிறான் என உணர்வாயாக.

3) ஒரே விஷயத்தை ஒருவன் தன் மனோ கற்பனையினால் ஆனந்தமாக ஏற்றுக் கொள்கிறான். அதே விஷயத்தை வேறொருவன் தன்மனோ கற்பனையினால் துக்கமாக ஏற்றுக் கொள்கிறான். ஆகையினால் சுகமும், துக்கமும் மனதில்தான் இருக்கிறது. ஆத்மா எப்பொழுதும் ஆனந்த மயமானது.

4) சொற்களின் கூட்டம் ஓர் அடர்ந்த காடு போன்றதாகும். அது மனதை மயக்குவதற்கு காரணமாக இருக்கிறது. உலக வார்த்தைகளை குறைத்து உண்மையை அறிபவன் தன்னை அறிந்தவனாகிறான். பந்த வார்த்தையே உனக்கு சத்ரு ஆகும். ஆத்ம வார்த்தையே உனக்கு மித்ரு ஆகும்.

5) அஞ்ஞானமாகிய சர்ப்பத்தால் கடிபட்டவனுக்கு வேதங்களாலும், மந்திரங்களாலும், சாஸ்திரங்களாலும், ஔஷதங்களாலும் ஒரு பயனும் இல்லை. தான் ஆத்மா என்ற பிரம்ம ஞானம் ஒன்றினால்தான் உண்மை சுகம் பெறமுடியும். நோயானது மருந்தின் நாமத்தை உச்சரிப்பதனால் தீராது. உட்கொண்டால்தான் தீரும். பிறர் கண்கொண்டு நீ காட்சிகளை காணமுடியாது. உன் சுயானுபூதி அனுபவம் ஏற்பட்டால்தான் உன் உண்மையை நீ உணர முடியும்.

6) பூமியில் மறைந்துள்ள புதையலானது, அதை அறிந்தவனுடைய ஆலோசனையைக் கேட்டு, அதன்படி பூமியை தோண்டி மறைக்கப்பட்டுள்ள பாறையை அகற்றினால்தான் புதையல் செல்வத்தை அடைய முடியும். அதே போல் வெளியே இருந்து சப்தம் போடுவதால் புதையல் கிடைத்து விடாது. அத்தன்மைபோல் ஸ்ரீபிரம்மத்தை அறிந்த மஹான்கள் வாயிலாக சப்தத்தையும் எண்ணத்தையும் குறைத்து, அமைதி, அடக்கம் என்னும் கடப்பாறையினால் அஞ்ஞானம் (தனக்கு அன்னியமாக காணுதல்) என்னும் பாறையை அகற்றி, சுயானுபூதி என்னும் பாத்திரத்தில் இருக்கும் ஸ்ரீபிரம்மானந்தம் என்னும் செல்வத்தை அடைய முடியும்.

7) முக்தியில் நாட்டமுடையவன் ஸ்ரீஸத்குரு சேவை செய்து, அவரால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீமஹாவாக்கியத்தை தைலதாரை போல் சிந்தித்து இடைவிடாமல் நீண்ட காலம்

பழகிவந்தால், ஓர் நாள் நிருவிகல்ப ஸமாதியை அடைய முடியும்.

8) சர்வசதாவும் ஸ்ரீஆத்மா பார்க்கப்பட வேண்டும் (ஏகமாக ஸ்ரீஆத்மாவை உணர்தல்), ஸ்ரீஆத்மா கேட்கப்பட வேண்டும் (வார்த்தையில் விபரீத புத்தியை நீக்கி சத்தான அர்த்தத்தை கிரஹித்தல்), ஸ்ரீஆத்மா உணரப்பட வேண்டும் (தாமே அது என்ற நிச்சய புத்தியால் உணர்ந்து அதுவாகவே ஆகுதல்). இதுவே சுயானுபூதியாகும். இந்த மாம்ஸ பிண்டம், தூலம் என்று புத்திமான்களால் சொல்லப்படுகிறது.

9) மரணத்தைத் தரும் கருநாகத்தின் விஷத்தை காட்டிலும் விஷய ஆசையாகிய பார்த்தல், கேட்டல், நுகர்தல், ருசித்தல், ஸ்பரிசித்தல் இந்த ஐந்தும் கொடுமையானதாகும். அந்த பாம்பின் விஷமானது உண்பவனையே கொல்கிறது. இந்த விஷய விஷமானது பார்த்தவனையே அழித்து விடுகிறது. முக்தியில் உனக்கு விருப்பம் இருக்குமாகில் இந்த விஷய விஷத்தை ஒழித்து விட்டு அமிர்தமாகிய திருப்தி, அமைதி, சாந்தி, பொறுமை, அடக்கம், தன்னம்பிக்கை உள்ளவனாக இரு.

10) விலக்க வேண்டியதை விலக்கினால் வர வேண்டியது தானே உன்னைத் தேடி வரும். அதற்கு நீ எந்த பிரயத்தனமும் செய்ய வேண்டாம். தொடக்கம் காணமுடியாத இந்த அவித்தையின் தளைகளாகிய கட்டுகளிலிருந்து நீ விடுபட வேண்டுமானால், உன் தூலத்தை போஷிப்பதாகியும் பிறருக்கு உபயோகப்படுவதாகியும் உள்ள ஜடத்திற்கு,

தேவைகளையும் ஆசைகளையும் குறைத்துக் கொண்டு உடல், மனைவி, மக்கள் என்ற மதி மயக்கமாகிய எமனை வெல்லுவாயாக. இதை வென்றால்தான் முக்தியை அடைய முடியும்.

11) அந்தக்கரணங்களாகிய மனம் புத்தி சித்தம் அஹங்காரம் என்றும், அவை தம் செயலுக்குத் தக்கபடி அதாவது ஒரு பொருளைப் பற்றி இது இப்படிபட்டதா அப்படிப்பட்டதா என எண்ணும்போது **மனமாகவும்,** இப்படிபட்டதுதான் என நிச்சயம் செய்யும்போது **புத்தியாகவும்,** தனக்கு பிரியமான பொருளை சிந்தித்து ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும் குணத்தால் **சித்தமாகவும்,** குணத்தால் கவர்ந்த பொருளை நான் எனது என்னும் உடலால் அபிமானத்துடன் அனுபவிக்கும்போது **அஹங்காரமாகவும்** அந்த மனமாகிய மஹாமாயையே வடிவெடுக்கிறது.

12) பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன் என பஞ்சப்பிராணன் ஐந்தும் இந்த தூலத்திற்கு செயல்பாட்டால் வெவ்வேறு நாமங்களை தரித்து, தங்கத்தைப் போலும் (ஆபரண நாமம் வேறுபடுவது போலும்), ஜலத்தைப் போலும் (சுவையிலும் பாகுபாட்டிலும் வேறுபடுவது போல) தூலத்தை இயக்கி வைக்கிறது.

13) **முதலாவதாக** வாக்கு முதலிய ஐந்து கர்மேந்திரியங்களும், **இரண்டாவதாக** காது முதலிய ஐந்து ஞானேந்திரியங்களும், **மூன்றாவதாக** பிராணன் முதலிய ஐந்து பஞ்சப் பிராணன்களும், **நான்காவதாக** புத்தி முதலிய

நான்கு அந்தக்கரணங்களும், **ஐந்தாவதாக** அறியாமையும் **ஆறாவது** அவித்தையும் ஆசை என்ற **ஏழாவது** பற்றுதலும், செயல் ஆகிய **எட்டாவது** கர்மாவும் சேர்ந்த எட்டுப் பாகம் கொண்ட மனசு சம்பந்தமான இதை **சூட்சும சரீரம்** என்று சொல்லப்படுகிறது:

15) லிங்க சரீரம் என்று சொல்லப்படுவது இந்த உடல் பஞ்சீகரணம் செய்யப்படாத மூலப் பொருள்களிலிருந்து தோன்றியதாகும். அதாவது பூர்வ கர்ம வாஸனையுடன் கூடி, கர்ம பலனை அனுபவிக்க செய்து அறியாமையால் தன்னை தானே மயங்கச் செய்து, தனக்குத் தானே ஓர் உபாதையையும் அதன் தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்வதாகும்.

இந்த ஜீவனுக்கு கனவானது தனியான ஓர் நிலையாக ஆகிறது. அந்த நிலையில் தூல தேக தொடர்பில்லாமல் தனித்திருந்து பிரகாசிக்கிறது. அதாவது இந்த கனவில் புத்தியானது விழிப்பு நேரத்தில் அதாவது ஜாக்ரதத்தில், தான் அனுபவித்த கர்மவாஸனையுடன், தான் கர்த்தா என்ற எண்ணத்துடன் அடைந்து பிரகாசிக்கிறது. அங்கு ஸ்ரீபரமாத்மாவாகிய சுயஞ்ஜோதியால் இந்த புத்தி பிரகாசிக்கப்படுகிறது. கனவில் தோன்றும் வெளிச்சம் ஸ்ரீஆத்மாவினுடைய பிரகாசமாகும். புத்தியைப் போர்வையாகக் கொண்ட அந்த ஸ்ரீபரமாத்மா அதாவது தன் பிரகாசத்தினால் அந்த புத்தி இயங்கிக் கொண்டிருந்தாலும், புத்தியால்

செய்யப்பட்ட அந்த கர்மத்தை ஆத்மா தொடுவதில்லை. அதாவது அந்த இயக்கத்திற்கு பிரகாசத்தைத் தான் கொடுக்குமே தவிர அதில் ஒட்டுவதில்லை.

அந்த ஸ்ரீஆத்மாவிற்கு இயற்கையாகவே பற்றற்ற தன்மை இருப்பதால் தன் உபாதியாகிய புத்தியால் செய்யப்பட்ட செயல்களை சிறிதும் தொடருவதில்லை. இந்த இடத்தில் மனம், சித்தம், அஹங்காரம் ஆகிய இந்த மூன்றும் புத்தியாகிய அந்தக் கரணம் என்றே கொள்ள வேண்டும். இந்த சித் ரூபியாகிய ஜீவனுக்கு அதாவது ஜீவாத்மாவிற்கு இந்த ஸூட்சும சரீரம் ஒரு தச்சனுக்கு வாள், உளி, சுத்தியல், வாச்சு என நான்கு கருவிகளைப் போல் எல்லா செயல்களுக்கும் கருவிகளாக உள்ளது. அதனால் இந்த ஆத்மாவானது பற்றற்றதாகி விடுகிறது.

லிங்க சரீர சம்பந்தத்தால்தான் எல்லா விவஹாரமும் நடைபெறுகிறது. ஆனால் சுஷுப்தியில் அந்த லிங்க சரீரத்தின் தொடர்பில்லாததால் அங்கு விவகாரம் இல்லை. அங்கு அவ்யக்தம் என்ற காரண சரீரம் ஒன்றுதான் உண்டு அதாவது மூலப்பிரகிருதி, சுத்த மாயை ஒன்றுதான் உண்டு. நல்ல பார்வை, பார்வையின்மை முதலியது கண்ணினது குணத்தைப் பொருத்தது. அதே போல் செவிட்டுத்தன்மையும் ஊமைத்தன்மையும் காது, நாக்கு ஆகியவற்றின் குணசம்பந்தமே தவிர அவை ஆத்மாவினுடையதல்ல. உள்மூச்சு, வெளிமூச்சு, பெருமூச்சு, கொட்டாவி, தும்முதல், உடலை விட்டு கிளம்புதல் முதலிய செயல்கள் பிராணன், அபானன் முதலியவற்றால்

காரியங்களாக நடக்கின்றன. பசியும் தாகமும் பிராணனுடைய குணங்களே. அந்தக்கரணமாகிய இந்த கண் முதலியவற்றிலும், உடலிலும், ஸ்ரீஆத்மாவிலிருந்து பிரதிபலித்த ஒளியால் அதாவது பிரகாசத்தால், நான் என்ற அபிமானத்துடன் இயங்கி இடம் பெறுகிறது. இதை **அஹங்காரம்** என்றே உணர வேண்டும். இந்த இயக்கத்தை செயல், செயல் புரிபவன், அனுபவிப்பவன் என மூன்று நிலைகளில் அனுபவிக்கிறது. அவை முறையே விழிப்பு, கனவு, உறக்கம் என மூன்று நிலைகளையும் குறிக்கிறது. ஜாக்ரத்தில் ரஜோகுணமும், சொப்பனத்தில் சத்வ குணமும், உறக்கத்தில் தமோ குணமும் மேலிட்டிருக்கும். விஷயங்களை இன்பமாகவும் துன்பமாகவும் பாவனை பண்ணுவது செயல்கள் அல்ல, அதன் குணங்களாகும்.

ஒரே விஷயத்தை இந்த மனமானது, ஒரு சமயத்தில் சுகமாக அனுபவிக்கிறது. அதே விஷயத்தை இந்த மனமானது ஒரு சமயத்தில் துக்கமாக அனுபவிக்கிறது. ஆகையால் சுகமும், துக்கமும் விஷயங்களில் இல்லை, மனதில்தான் உள்ளது. ஆத்மா எப்பொழுதும் ஆனந்தமாக உள்ளது, சுக துக்க பாவனையை மனதால் சமப்படுத்த வேண்டும்.

**எல்லாம் நீ!**

# ௧. மாயா நிரூபணம்

மாயை என்பது அவ்யக்தம் எனப் பெயருடையதாகும். அது ஆதியற்றது, அஞ்ஞான வடிவானது, அதாவது அறியாமையோடு கூடியது, முக்குண வடிவமானது. ஈசனுடைய சக்தி வடிவமானது, சிறந்த புத்திமானால்தான் அதை ஊகித்து அறிய முடியும். மாயையால் இந்த உலகம் பிறப்பிக்கப்பட்டது. இதை கீதையில் ஸ்ரீபகவான் சொல்லுகிறார்; 'ஏ பார்த்தா! முக்குணவடிவமானதும், தெய்வசக்தி வாய்ந்ததுமான எம்முடைய மாயை கடத்தற்கரியது. எவர்கள் எம்மையே கதியெனச் சரண் அடைகிறார்களோ அவர்கள்தான் இந்த மாயையை தாண்ட முடியும்' என்கிறார்.

மின்சாரம் கண்களுக்குத் தோற்றாமல் காரியங்களால் அறியப்படுவது போல மாயையை உலக இயக்கத்தால்தான் உணர முடியும். அது இருப்புடையதும் அன்று, இருப்பில்லாததுமன்று, அதை பகுத்துப் பார்க்க முடியாது, இப்படிப்பட்டதென்று கூற முடியாத ஆச்சர்யகரமான ரூபமுடையது.

பாம்பு என்ற அறிவு மயக்கம், பழுதை (கயிறு) என்ற சுத்த அறிவால் நீங்கிப்போகும். அது போல இரண்டென்ற நிலை மாறி ஒன்றென்ற உறுதியினால் இந்த மாயை அழியும். இந்த மாயை சம்பந்தமான குணமாகிய ரஜோ குணமானது சந்தேக

குற்றத்தினால் பரிணமிக்கப்படுகிறது. இதுவா அதுவா என திரித்துக் காட்டி சந்தேகத்தை பெருகச் செய்து மனதை அல்லலுறச் செய்யும். தமோ குண ரூபமாக ஆசை, கோபம், லோபம், டம்பம், முதலிய குண தோஷத்தைக் கற்பித்து, ரஜோகுணத்தை தமக்கு பயன்படுத்தி, புருஷனுடைய புத்தியை வெளிநாட்டச் செயல்களுக்கு இழுத்துச் சென்று பந்தம் பாசம் என்ற முடிச்சை போட வைக்கிறது. இந்த தமோ குணமானது ஒரு பொருளை மற்றொன்றாக தோற்ற வைத்து, அதாவது சுத்த தங்கத்தை ஆபரணம் என்ற பெயரால் பல நாம ரூபத்தை கொடுத்து மயங்கச் செய்து ஜீவனுடைய பிறப்பு இறப்புக்கு ஆதி காரணத்தை உண்டு பண்ணுகிறது.

எவனுக்கு ஒரு பொருளில் மாறுதலும், சந்தேகமும் உண்டாகிறதோ அவன் பந்தம் என்ற முடிச்சை போட்டுக் கொள்கிறான். எவனுக்கு மாறுபட்ட தன்மையும் அதில் சந்தேகமும் இல்லையோ அவன் உண்மையை உணர்ந்தவனாவான். பிரம்ம பாவனையும், திட நம்பிக்கையும் இல்லாதவனை இந்த சந்தேகமும், ஆவரண சக்தியும் இடைவிடாமல் வாட்டுகிறது.

அறியாமை, சோம்பல், பகுத்தறிவின்மை, அஜாக்கிரதை, முட்டாள்தனம் முதலியவை தமோ குணங்கள். சத்வ குணம் நல்ல நீரைப் போல் பரிசுத்தமானது. அப்படி இருந்தபோதிலும் சிலசமயம் ரஜோகுணத்தோடும் தமோகுணத்தோடும் சம்பந்தம் கொள்ளும்போது பிறவிக்கு உரிய தளைகளை

மாட்டி விடுகிறது. இப்படி கலப்படமான இந்த **சத்வ குணத்தின் அடையாளங்களை கவனிக்கவும்.** இயம நியமம், சிரத்தை, பக்தி, பதமுக்தியில் ஆசை, தெய்வ சம்பத்து, பொய்யானவற்றிலிருந்து விலகுதல்.

பரிசுத்தமான இந்த **சத்வ குணத்தின் இயல்புகள்;** மனத் தெளிவு, தன்னைத் தானறிதல், சாந்தி, அமைதி, போதுமென்று திருப்தியுறுதல், சந்தோஷம், பரமாத்ம புத்தி முதலியனவாகும். மற்ற ரஜோ தமோ குணங்களால் கூடி இருக்கும்போது சாதனை செய்து, மேலே கண்ட நிலைகளை அனுபவிக்க வேண்டும். சர்வ சதா சத்வ குண சம்பன்னனாக இருந்தால் இந்நிலைகள் மாறுவதில்லை.

**எல்லாம் நீ!**

# 10. காரண சரீரம்

முக்குணங்களால் நிரூபிக்கப்பட்ட இந்த அவ்யக்தம் அதாவது மூலப்பிரகிருதி இந்த ஜீவனுக்கு காரண சரீரமாக இருக்கிறது. இந்த எல்லா குணங்களின் அதன் உணர்வுகள் ஒழிவும், நிச்சயம் பண்ணப்பட்ட புத்தியின் உண்மையான நிலையும் ஆழ்ந்த உறக்கம் எனப்படும். இதன் அடையாளம், நான் ஒரு சிறிதும் அறியவில்லை என்ற பேருண்மையாகும்.

குறிப்பு: "நான் ஒரு சிறிதும் அறியவில்லை" என்பது ஆத்மாவுடன் மனம் தற்காலிகமாக இணைந்த நிலையாகும்.

**எல்லாம் நீ!**

# 11. ஆத்ம நிரூபணம்

இந்த மாயா தோற்றங்களும் உடல்வரை மாயையின் செயல்களாகிய அனைத்தும் பொய். இவை அனைத்தும் அனாத்ம தத்துவம் என களைத்தெறிந்தால், மிகுந்தது எதுவோ அதுவே ஆத்ம சொரூபம்.

உனக்கு ஸ்ரீபரமாத்மாவின் உண்மை நிலையை விளக்கிக் கூறுகிறேன். அதை அறிந்து பந்தம் என்ற கூட்டிலிருந்து விடுபட்டவனாய் மோக்ஷ நிலையை அனுபவிக்கக் கடவாய்.

1) நான் என்னும் உணர்விற்கு ஆதாரமாய், என்றும் உளதாகிய ஒன்று இருக்கிறது. இந்த உறுதி முதலில் வேண்டும். விழிப்பு, கனவு, உறக்கம் இந்த மூன்று நிலைகளிலும் சாட்சியாக இருந்து கொண்டு, அந்நிலையில் நடைபெறும் தொழிலையும், அதை நடத்தும் புத்தியையும், அதை நான் என்று ஏற்றுக் கொள்ளும் அஹம்பாவத்தையும் எவன் அறிகிறானோ அவன் ஆத்மாவை அறிந்தவன்.

2) எவன் தானாகவே அனைத்தும் பார்க்கிறானோ, எவனை வேறு எதுவும் பார்க்க இயலாதோ, எவன் புத்தி முதலியவற்றை பிரகாசிக்கச் செய்கிறானோ, எவனை அந்த புத்தி பிரகாசிக்கச் செய்யாதோ, எவனால் இந்த உலகம் வியாபிக்கப்பட்டுள்ளதோ, எவனை எதுவும்

வியாபிக்காததோ, பிரகாசமுடையது போல் தோற்றும் இவ்வுலகம் எவனால் பிரகாசிக்கிறதோ, எவனுடைய சந்நிதியில் தூலம் இந்திரிய கருவிகரணாதிகள் தத் தமக்குரிய விஷயங்களில் ஏவப்பட்டது போல் செயல்படுகின்றதோ அவனே ஸ்ரீபரமாத்மா, அவனே அந்தராத்மா. அவனே பழமையான புருஷன். அவனே ஒவ்வொரு உணர்விலும் விளங்குபவன். என்றும் உள்ள இவ்வாத்மா பிறப்பதில்லை, இறப்பதில்லை, வளர்வதில்லை, குறைவதில்லை, மாறுவதில்லை. இந்த உடல் லயமான போதும் குடத்திலுள்ள ஆகாயம் போல் தான் அழிவதில்லை. பிறக்கிறது இருக்கிறது, வளர்கிறது, மாறுகிறது, குறைகிறது, அழிகிறது. இந்த ஆறு விவகாரங்களும் ஆத்மாவுக்கு இல்லை. அடக்கப்பட்ட மனதால் உன்னிடத்திலேயே உன்னுடைய ஆத்மாவை இது தான், நான் என்ற புத்தி தெளிவால் நேராக அறிவாயாக.

அப்படி நீ நேருக்கு நேராக அறிந்தால், பிறப்பு இறப்பு ஆகிய அலையுடன் கூடிய இந்த பிறவிக் கடலை கடந்து பிரம்ம ஸ்வரூபத்துடன் இரண்டற கலப்பவனாவாய் தன்னடக்கம் பெற்றவன் உள்ளத்தெளிவை எய்துகிறான். ஐயம், திரிபு, அறியாமை நீங்குவதால் புத்தி தெளிவு ஏற்படும். அதனால் ஸ்ரீஆத்ம தரிசனம் கிடைக்கும்.

**எல்லாம் நீ!**

## 12. அறியாமை

இங்கு ஆத்மா அல்லாத உடலையும், அதன் இயக்கத்தையும் நான் என்றால் அது புருஷனுக்கு தளைகளாகும். நிலையற்றதும், அசுத்தமானதும், துன்பம் நிறைந்ததுமான இம்மல உடலை நான் என்று நீராட்டி போஷித்து காப்பாற்றுகிறான், இந்த ஆத்ம புத்தி அவித்தையாகும். தான் அல்லாததை, தான் என்று கவரப்படும் புத்தி தமோ குணத்தால் உண்டாகிறது. தான் செய்த கூட்டில் பட்டுப் புழுபோல் அஞ்ஞானி அழிகிறான். சரீர அபிமானத்தால் பிரிய வஸ்துக்களின் மேல் ஆசை, அது கிடைக்காவிட்டால் கோபம், கிடைத்து விட்டால் லோபம் என்று இவ்வாறு மேலும் மேலும் துன்பத்தை வளர்க்கிறது.

ஆகவே ஆத்மாவுக்கு நாசம் விளைவிக்கும் காமம், கோபம், லோபம் இந்த மூன்றையும் ஒழிக்க வேண்டும். சூரிய ஒளியால் உண்டாக்கப்பட்ட மேகக் கூட்டம் சூரியனையே மறைத்து, தான் பிரகாசிப்பது போல் ஆத்மாவிடம் உதித்த அஹங்காரமானது ஆத்மானந்தத்தையே மறைத்து, அந்த ஆத்ம சைதன்யத்தால் அஹங்காரமே பிரகாசிக்கிறது. இவ்விரண்டு தளைகளால் அதாவது அறியாமை, அஹங்காரம் ஆகியவற்றால் மயக்கமடைந்த புருஷன் தன்னை உடல் என்று கருதி சுழல்கிறான்.

சம்ஸாரமாகிய இந்த விருக்ஷத்தினது விதை அறியாமையாகிய அஞ்ஞானமாகும். உடலை தான் என்று கொள்ளும் புத்தியும், உடலின் மேல் பற்றும் துளிர்களாகும். இந்திரிய கூட்டம் கிளைகளாகும். செயல் ஜலமாகும், உடல் அடிமரம். பிராணன்கள் கிளைகள். இந்திரிய கூட்டம் கிளை நுனிகள், விஷயங்கள் புஷ்பங்கள். செயல்களால் விளைந்த பலவித சுக துக்கம் பழங்கள், இப்பழத்தை உண்பவன் ஜீவனாகிய பறவை. எந்த இன்பங்கள் வெளி ஸ்பரிசத்தால் உண்டானதோ அவை துன்பத்திற்குப் பிறப்பிடமானவை என்று அறிய வேண்டும். அவைகளுக்கு ஆரம்பம், இருப்பு, முடிவு உண்டு. அதை ஞானி வெறுக்கக் கடவன்.

அஞ்ஞானத்தின் வடிவமாகிய தூலத்திற்கு பிறவி, நோய், மூப்பு, இறப்பு முதலியவை உண்டாகும். இவைகளே இதன் தளைகளாகும். ஸ்ரீபகவானுடைய அருளால் தீட்டப்பட்டதும் ஆன விவேக வைராக்கியமென்னும் வாளினால்தான் இந்த தளையை அறுக்க முடியும். மற்றும் சாஸ்திரமோ, மந்திரமோ, யோகமோ, சத கோடி கருமங்களாலோ இந்த தளைகளை நாசம் செய்ய இயலாது. ஐந்து வகையான கோசங்களின் நீக்கம் ஏற்பட்டதும் இவ்வாத்மா பரிசுத்தமாகப் பிரகாசிக்கிறான். சுத்த ஜலத்தை பாசி மூடிக் கொண்டிருப்பது போல, இந்த ஆத்மாவை பஞ்சகோசம் மூடிக்கொண்டிருக்கிறது. அறிவொளியாகிய தன்னால் தான் சத் சித் ஆனந்த வடிவினன் என அறிந்து பிரம்மானந்தத்தை அனுபவிக்கிறான். சர்ப்பமும் அதன் மேல் சட்டையும் வெவ்வேறானவை. அதுபோல் ஆத்மாவும் சரீரமும் வெவ்வேறானவை என அறிய வேண்டும்.

**எல்லாம் நீ!**

## 13. பஞ்ச கோசங்கள்

### 1) அன்னமய கோசம்:-

இந்த உடல் அன்னத்தினால் கட்டப்பட்ட வீடு இடிந்த சுவருக்கு களிமண் வைத்து பூசப்படுவது போல், இந்த உடலுக்கு அன்னத்தைக் கொடுத்து போஷித்து வைக்கப்படுகிறது, அதனால் இதற்கு அன்னமய கோசம் என நாமம் வழங்கிற்று. உணவால் இத்தூலம் தோற்றப்படுகிறது, அது இல்லையானால் இத்தூலம் அழிந்து விடும். அந்த அன்னத்தால் மேல் தோல், அடித்தோல், மாம்ஸம் வளர்ச்சி பெறுகிறது. உடல் அறிவில்லாதது, ஜடமானது, குடம் முதலியன போல் பார்க்கப்படுவது. எது ஆதியிலும் முடிவிலும் இல்லையோ அது இடையிலும் இல்லை. உடல், அதன் செயல், அதன் நிலை ஆகியவற்றிற்கு சாட்சியாயிருக்கும் ஆத்மா தனித்திருக்கிறது. மதிகெட்டவனே! மாம்ஸம், கொழுப்பு, மலம், எலும்பு இவைகளின் கூட்டமாகிய இந்த உடலை 'நான்' என்னும் அபிமானத்தை விட்டுவிடு.

**கடோப உபநிஷத்** சொல்வதாவது: வேதங்களைக் கற்றதாலோ, நுண் அறிவினாலோ, விரிந்த கேள்வியாலோ இந்த ஆத்மா அடையப்படுவதில்லை. ஆத்மா ஒன்றையே எவன் ஸ்ரீபரமாத்மாவாக பிரார்த்திக்கிறானோ அவனுக்கு ஸ்ரீஆத்மா தன் உண்மை ஸ்வரூபத்தை பிரகாசிக்கப் பண்ணுகிறது. துர்நடத்தை அதாவது உலக ஆச்சார அனுஷ்டானங்களை

விலக்கி, இந்திரிய நிக்ரஹத்துடன் எவன் இருக்கிறானோ அவன் ஆத்ம ஸ்வரூபமாகவே ஆகிறான்.

## 2) பிராணமய கோசம்:-

பிராணமய கோசமானது கர்மேந்திரியங்களுடன் பிணைக்கப்பட்டு அதன் செயலுக்கு ஆதாரமாய் இவ்வுடலை ஆட்டி வைப்பது பிராணமய கோசமாகும்.

**தைத்திரிய உபநிஷத்** சொல்லுவதாவது: எதில் பிராண சம்பந்தம் உண்டோ அது செயல்படும். எதில் பிராண சம்பந்தம் இல்லையோ அது செயல்படாது. கர்மேந்திரியங்கள் அன்னமய கோசத்தால் பிணைக்கப்பட்டாலும், இந்த பிராணமய கோசம் இல்லையானால் கர்மாவை செய்யாது. பிராணமய கோசம் ஆத்மாவன்று, இது வாயுவின் சொரூபம், போக்குவரவு உடையது. எந்தக் காரணத்தைக் கொண்டும் தன்னுடையதையோ, வேறானதையோ, பிரியமானதையோ, பிரியமில்லாததையோ இது ஒரு போதும் அறிவது இல்லை.

ஆனால் இது எப்பொழுதும் வேறொரு பொருளை ஆட்டி வைக்கப்படுவதாயிருக்கிறது. இதை அடக்க பிராணாயாமம் ஒன்றே பயன்படும்.

## 3) மனோமய கோசம்:-

ஞானேந்திரியங்களின் இயக்கம் மனோமய கோசம் ஆகின்றன. இதன் இயக்கம் 'நான் எனது' என்ற மாறுபாட்டிற்கு காரணமாக உள்ளது, வலிமைமிக்கது, நாம ரூபத்தை கொடுத்து

வேற்றுமைப்படுத்துவது. இது முந்தைய கோசமாகிய அன்னமய கோசத்தையும் அதன் பிரவர்த்தியையும் பூரணமாக நிரப்பிக் கொண்டு விரிந்து நிற்கிறது. எல்லா இந்திரிய வியாபாரங்களும் மனதின் வசப்பட்டவை. இந்திரிய வியாபாரம் இல்லாமலும் கூட கனவில் இந்திரிய வியாபாரங்கள் மனதால் கற்பிக்கப்படுகின்றன.

**தைத்திரிய உபநிஷத்** சொல்வதாவது: இந்த பிராணமயத்திலும் இந்த மனமானது தம் கற்பனையினால் மனோமய ஆத்மாவாக பிரகாசிப்பதைப் போல் தோற்றும். இந்த மனோமய காரியமாவது; நான் என்ற அஹங்காரமும், எனது என்ற மமஹாரமும், சங்கல்ப விகல்பங்களும், அதாவது நினைப்பதும் மறப்பதும் ஆகும். இது கிரஹித்து நடமாடும் இடங்கள்: பார்த்தல், கேட்டல், நுகர்தல், ருசித்தல், ஸ்பரிசித்தல் ஆகியவையாகும். இந்த மனதை காட்டிலும் வேறான அவித்தை எதுவும் கிடையாது.

**''சினமிறக்கக் கற்றாலும், சித்தியெல்லாம் பெற்றாலும், மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே''** என தாயுமானவர் பாடியுள்ளார். ஆழ்ந்த உறக்கத்தில் இந்த மனதின் செயல் எதுவும் இல்லை. இது எல்லோரும் அறிந்ததே. ஆகையால் புருஷனுக்கு பிறவிச் சுழலானது மனதின் கற்பனையின் படியே உண்டாகிறது. அது எப்படியாயின் மேகம் காற்றினால் கொண்டு வரப்படுகிறது. அதே மேகம் காற்றினால் அடித்துச் செல்லப்படுகிறது. அத்தன்மை போல் பிறவியும் பிறவியின் நீக்கமும் மனதின் கற்பனையே தவிர, உண்மை அல்ல. அதாவது தூலத்தின் செயல்பாடுகளை

குணம் என்ற கயிற்றால் கட்டி அலைக்கழிக்கிறது. அந்த மனமே அந்த குணங்களை கழற்றி விடுவிக்கவும் உதவுகிறது. பந்தம், பாசம், இச்சை இவைகளைக் கொண்டு பிணைப்பதும் மனமாகும். இத்தளையை நீக்கி விவேகம், வைராக்கியம், பரிசுத்தம் ஆகியவையை அடைந்து மோக்ஷத்திற்கு வழி வகுத்துக் கொடுப்பதும் இந்த மனமாகும்.

**அமிர்தபிந்து உபநிஷத்** சொல்வதாவது: விவேகத்தையும், வைராக்கியதையும் முதலில் சம்பாதித்து கொண்டு உலகில் பிரவேசிக்க வேண்டும். அதாவது முட்கள் நிறைந்த காட்டில் பாதரக்ஷையுடன், சஞ்சரிப்பது போல் இவ்வுலகில் சஞ்சரிக்க வேண்டும். பிராமணன் சூஸ்திரன் என்றும், பிரம்மச்சாரி, கிருஹஸ்தன், குணம், தொழில் என்ற பேதத்தை உண்டு பண்ணி தூல வடிவிலும் சூட்சும வடிவிலும் கற்பனையால் இந்த மனமானது இயங்குகிறது. இந்த மனதின் தோஷத்தை நீக்குவதானால் முக்தியிலேயே சர்வசதா அந்த மனதை படியச் செய்ய வேண்டும். உண்மையைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல். இதில் சிரத்தை இருப்பவனுக்கு இந்த மனமானது அனுசரணையாக இருக்கிறது. ஆகையால் இந்த மனோமய கோசமும் ஆத்மா ஆக முடியாது.

இந்த மனதிற்கு ஆரம்பமும் முடிவும் இருப்பதால் இது அசத்தாகும். இதற்கு சாக்ஷி, மனம் வேறிடத்தில் இருந்தால் நான் காணவில்லை என்றும், மனம் வேறிடத்தில் இருந்தால் நான் கேட்கவில்லை என்றும் ஆகிவிடுகிறது. ஆக இந்த மனம் மாயா மயமாகும், மூலப்பிரகிருதியாகும். புத்தியானது

ஞானேந்திரியங்களுடன் சேர்ந்து அதன் இயக்கத்தின் மயமாகி, தான் கர்த்தா என்னும் லக்ஷணத்தை அடைந்து, விஞ்ஞான மய கோசம் என்னும் நாமத்தை தரித்து பிறவிச் சுழலுக்கு காரணமாக இருக்கிறது.

## 4) விஞ்ஞானமய கோசம்:-

ஆத்ம சைதன்யத்தில் பிரதிபிம்பமான ஜீவனை தொடர்ந்து நிற்கும் இந்த விஞ்ஞானமய கோசம் மாயையின் ஒரு கூறு ஆகும். அறிபவனும், செயல்புரிபவனும் இதன் ஆற்றலாகும். அஹங்காரத்தை உடையதால் பாப புண்ணிய செயல்களை தீவிரமாக செய்யக்கூடியதாய், உடலின் நிலையாகிய ஆஸ்ரமம், கர்மம், தர்மம், குணம் ஆகியவற்றால் அபிமானத்தை உடையதாய், பரமாத்மாவுக்கு மிக நெருங்கிய பழக்கத்தில் இருக்கும் காரணத்தால் அதிக பிரகாசமுடையதாக இருக்கிறது. இதையே ஆத்மா என புத்தியுடையவன் மதிமயக்கத்தால் பிறவியில் சுழல்கிறான்.

## 5) ஆனந்தமய கோசமானது:-

ஆனந்தமய கோசமானது ஸ்ரீபரமாத்மாவின் அடுத்த பிரதிபிம்ப ஸ்தானமாக இது பரிணமிக்கிறது. தனக்கு இச்சித்த பொருள் கிட்டும்போது இது உதிக்கும். பிரியம் மகிழ்ச்சி உடையதாயிருக்கும். சத்கர்ம வசத்தால் புண்ணியத்தை அனுபவிக்கும் பாக்கியசாலிகளுக்கு இந்த ஆனந்தமய கோசம் பிரகாசிக்கும். சர்வசதாவும் ஆனந்தத்தை தரிக்கும் தன்மையினால் இது ‘ஆனந்தமய கோசம்’ என பெயர் பெற்றது.

தற்போதத்தோடு கூடி இருப்பதாலும் பிரகிருதியின் ஒரு மாறுபாடாக இருப்பதாலும், அன்னமயம் பிராணமயம் இவைகளுடன் கூட்டுறவு கொள்வதாலும், தானே ஆத்மா என்ற தற்போத உணர்ச்சியோடு இருப்பதாலும் இது ஆத்மாவாக இருக்க முடியாது.

இந்த ஐந்து கோசங்களுக்கு அப்பாலும் மூன்று நிலைகளுக்கும் **(அதாவது விழிப்பு, கனவு, உறக்கம்)** சாட்சியாயும், மாசற்றதாயும், எப்பொழுதும் ஆனந்த வடிவாயும், சுயம் பிரகாசமாயும் உள்ள ஸ்ரீஆத்மாவை உண்மை ஞானியால்தான் உணரப்பட வேண்டும். பஞ்ச கோசங்களுக்கும் அடிப்படையாய் அனைத்திற்கும் பிரதிஷ்டையாய் எஞ்சி நிற்பதே ஆத்மாவாகும், அதுவே உன் சொரூபமாகும். அதுவே ஸ்ரீபரப்பிரம்மமாகும்.

***சீடன் கேட்பது:-*** குருதேவா! பரமாத்மாவிற்கு ஜீவ பாவனையானது உபாதியை, தான் என்ற மதி மயக்கத்தால் ஏற்படுகிறது. (உபாதி: மற்றொன்றைத் தானாக பாவிப்பது) இந்த உபாதிக்கு ஆதி இல்லாததால் அதற்கு அழிவு இருப்பதாக தோற்றவில்லை. ஆகையால் இந்த ஜீவனாக இருக்கும் நிலையோ என்றும் இருப்பதாக தெரிகிறது. இந்த பிறவிச்சுழலும் இவனைவிட்டு நீங்குவதாக தெரியவில்லை? அப்படி இருக்கையில் இவனுக்கு முக்தியானது எங்கனம் கை கூடும்?

**ஸ்ரீஸத்குரு வாசகம்:-** உன் கேள்வி உண்மையானதே! சற்று கவனத்துடன் கேட்பாயாக! மந்த மதி மயக்கத்தால்

ஒன்றை மற்றொன்றாக பாவனை பண்ணும் எண்ணமானது ஒப்புக் கொள்ள முடியாது. பற்றற்றவனுக்கும், செயலற்றவனுக்கும், உருவமற்றவனுக்கும் மதி மயக்கம் எப்படி வரும்? ஆகாயதிற்கு நீல நிறம் உண்மையில் உண்டா? குணம் கடந்தவனாயும், செயல் அற்றவனாயும், ஆனந்த வடிவினனாயும், சாட்சியாய் இருப்பவனாயும் இருக்கும் உனக்கு, புத்தியின் கல்பிதத்தால் ஏற்பட்ட ஜீவத்தன்மை எவ்வாறு பொருந்தும்? அந்த ஜீவத்தன்மை உண்மையாக இருந்தால் உன் மதிமயக்கம் நீங்கியவுடன் அது இல்லாமல் போகிறதே. மதி மயக்கம் எதுவரையிலும் உண்டோ அதுவரையிலும் பொய்யில் முளைத்த இந்த சர்ப்பம் தோற்றத்தான் செய்யும். உன் மதி மயக்கம் ஒழிந்ததும் கயிறுதான் தெரியும். அது பரியந்தம் உன் உண்மை விசாரணை அமைதியாகவும் சாந்தமாகவும், பொறுமையாகவும், தொடர்ந்து நடைபெற வேண்டும். ஓர் நாள் உன் மதி மயக்கம் நீங்கும். அன்று இந்த சர்ப்பம் தோற்றாது. அதாவது இந்த உலகம் தோற்றாது. உன் உண்மை சொரூபம் ஒன்றுதான் தோற்றும். குடத்தை மண் என்று அறிவதாலும் சர்ப்பத்தை பழுதை (கயிறு) என்று அறிவதாலும் உன் உண்மை அறிவின் விசாரணை முதிர்ச்சி பெறுகிறது. உன் உண்மை அறிவின் முதிர்ந்த இடமே பிரம்மமாம்.

**எல்லாம் நீ!**

## 14. ஆத்ம ஸ்வரூபம்

**சீடன் கேட்பது:-** குருநாதரே! இந்த ஐந்து கோசங்களும் பொய் என்று விலக்கப்பட்ட பின் முற்றிலும் எதுவும் இல்லை, ஒரு சிறியதையும் இங்கு நான் காணவில்லை. ஞானியால் தனதாத்மாவாக அறிவதற்கு இங்கு என்ன பொருள் இருக்கிறது?

**குருதேவர்:-** நீ ஆராய்ந்து அறிவதில் திறமை உள்ளவனாக இருக்கிறாய். உன்னால் கூறப்பட்டது உண்மையே. நான் என்ற எண்ணம் உன் உடல் முதலிய எல்லா தோற்றங்களிலும் தோற்றுப்படுகின்றன.

இந்த எண்ணமானது நானாக இருக்கிறேன் என்று உறுதிப்படுத்துகின்றன. எதுவும் இல்லை என்று சொல்லுவதும் இந்த கருத்தை அனுசரித்தே இருக்கும். எப்படி என்றால் இவை எல்லாம் எவனால் அனுபவிக்கப்படுகிறதோ, எவன் தான் மட்டும் அனுபவிக்கப்படுவதில்லையோ, அவனை உன் நுண்ணிய புத்தியால் அறியும் அறிவை உன் ஆத்மாவாக உணர். குடத்து ஜலத்தில் பிரதிபலித்த சூரிய பிம்பத்தை பார்த்து புத்தி இல்லாதவன் சூரியனாக நினைக்கிறான். அத்தன்மை போல் புத்தியாகிய உபாதியில் தோன்றும் பிரதிபிம்பத்தை மதி மயக்கத்தால் ‘‘நான்’’ என்று நினைக்கிறான், அதாவது புத்தியில்

தோன்றும் விபரீத பாவணைகளை எல்லாம் ''நான்'' என மயங்கினால் இதற்கு யாம் என் செய்வோம். குடம், ஜலம், பிரதிபிம்பம் இந்த மூன்றையும் நீ எதனால் காண்கிறாயோ அந்த சூரியனே உண்மை என அறிவாளியால் பிரகாசமான ஆத்மா காணப்படுகிறது. உடலையும், புத்தியையும், சித்தத்தின் பிரதிபிம்பத்தையும் விடுத்து, நிச்சய புத்தியாகிய குகையில் மறைந்திருக்கும் பிளவுபடாத ஞான வடிவினனும், அனைத்தையும் பிரகாசிப்பதும், காரண காரியத்தை விட வேறானதும், என்றும் உள்ளதாயும், எங்கும் நிறைந்ததாயும், அனைத்துள்ளும் ஊடுறுவி இருப்பதுவும், மிக நுட்பமானதும், உள் ஒன்றும் வெளி ஒன்றும் இல்லாததும், தன்னை விட வேறல்லாததும் சர்வ சாக்ஷியாயும், ஆத்மாவாகிய தனது இந்த உண்மை வடிவை நன்றாக அறிந்து புருஷன் பாபமற்றவனாயும், மாசற்றவனாயும், சாவற்றவனாயும் ஆகிறான்.

குழந்தாய்!

1) பார்வைகள் எந்த அளவு குறைகிறதோ? (நாம ரூப பேதம் காணாதவன்).

2) வார்த்தைகள் எந்த அளவு குறைகிறதோ? (நாமரூபத்தை பேசாதவன்)

3) காதுகள் எந்த அளவு கேட்கவில்லையோ? (சப்தார்த்தத்தில் விபரீத பாவணை).

4) நாசியின் வாசனை எந்த அளவு தோற்றவில்லையோ? (பொருள்களில் சுகந்தம், நாற்றம், தோற்றாத தன்மை).

5) நாக்கில் எந்த அளவு சுவை தெரிவதில்லையோ? (சுவை அற்றவன்).

6) தூலத்தில் எந்த அளவு உணர்வு தெரிவதில்லையோ? (சரீர ஸ்பரிசத்தில் சுக துக்கம் மறந்தவன்) அவனுக்கு பயம் தோற்றுவதில்லை. அதனால்தான் ''நாம் யார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்'' என ஸ்ரீஅப்பர் ஸ்வாமிகள் பாடியுள்ளார். பிரம்ம மயமாகவே ஆகி விட்ட ஞானி, பிறவி சுழலுக்கு மீண்டும் வர மாட்டான். உன் அறியாமையினால் ரூபம் பல வடிவமாக காணப்படும், அவை எல்லாம் உன் கற்பனையாகிய தோஷங்கள் நீங்கிய இடத்து சுத்தம் பிரம்ம மயமேயாகும்.

எப்படி என்றால் மண்ணினால் செய்யப்பட்ட குடம் மண்ணேயாகும். குடம் என்ற பெயர் எதனால் உண்டானது? வடிவத்தாலும், அந்த வடிவத்திற்கு உன் மனோ மய கற்பனையினாலும், அக்ஷர வடிவில் அதாவது பாஷை வடிவில் கொடுக்கப்பட்டது. அந்த அக்ஷரமாகிய ஒலி அதாவது சப்தம் எங்கிருந்து உண்டானது? அது பிரணவத்தில் இருந்து உண்டானது. அந்த பிரணவம் எங்கிருந்து உண்டானது? நிர்மலமான ஆகாயத்தில் இருந்து உண்டானது. அந்த ஆகாயம் எங்கிருந்து உண்டானது? சுயம் ஜோதியாயும், இரண்டற்றதாயும், ஏகமாய் நிறைந்திருக்கும் ஸ்ரீபரம்பொருளிலிருந்து உண்டானது. இப்படி உண்மையை விசாரிக்கின் சகலமும் ஒடுங்கி விடுகிறது. அப்படியாயின் குடத்தின் ரூபம் மண்ணைத் தவிர வேறானதில்லை. அப்படியாயின்

குடம் எங்குள்ளது? பொய்யாக கற்பனை செய்யப்பட்ட பெயரளவில் தான் உள்ளது. ஆகையால் குடமானது மதி மயக்கத்தால் செய்யப்பட்ட கற்பனையேயாகும். மண் ஒன்றே உண்மை நிலை.

'இவ்வுலகு உண்மை' என வாதம் புரிந்தால் ஆத்மாவின் அளவற்ற தன்மைக்கு அழிவு ஏற்படுத்திய குற்றத்திற்கும், ஈசனுக்குப் பொய் பேசிய குற்றமும், மஹாத்மாக்களின் சத்திய வசனத்திற்கு பொய் சாட்டிய குற்றமும் ஆகும்.

ஆகையால் ஸ்ரீபரமாத்மாவினின்று இவ்வுலகம் தனியாக இல்லை. தனியாக தோற்றப்படுகிறதே என்றால் அது குணம் முதலியவற்றைப் போலும், ஆகாயத்தில் நீல நிறம் தோற்றுவதைப் போலும் தோற்றுவதே அன்றி உண்மை அல்ல. அடிப்படையான அந்த உண்மைப் பொருளே உன் மதி மயக்கத்தால் அவ்வாறு தோற்றுகிறது. மதி மயக்கத்தால் வேறுபட்டு தோற்றிய சிப்பியில் வெள்ளியானது, அதை கையால் எடுக்கும் வரை வெள்ளியாகவே உன் மனோ கற்பனையினால் தோற்றியது, அதை உணர்ந்த உடன் வெள்ளி அங்கு இல்லை, சிப்பிதான் இருக்கிறது. அங்கு வெள்ளி வந்ததும் அது போனதும் உன் மனோமய கற்பனையே! ஆகவே இந்த உலகம் பிரம்மத்திடம் கல்பிக்கப்பட்ட ஓர் பெயரளவில்தான், உண்மை இல்லை.

அந்த ஸ்ரீபரவஸ்து என்றும் உள்ளதாயும், எங்கும் நிறைந்ததாயும், இரண்டற்றதாயும், பரிசுத்தமாயும், மாசற்றதாயும், அமைதியின் வடிவாயும், அடி முடியற்றதாயும், செயலற்றதாயும்,

எல்லையில்லா ஆனந்த வடிவாயும், மாயையால் ஏற்பட்ட வேற்றுமைகள் முற்றும் நீங்கியதாயும், அழிவற்றதாயும், சதானந்த வஸ்துவாயும், நாம ரூபமற்றதாயும், தோற்றப்படாததாயும், தானே பிரகாசிப்பதாயும், கற்பனைக்கு அப்பால்பட்டதாயும், தனி அறிவின் வடிவமாயும் ஞானிகள் உணர்கிறார்கள்.

நித்தியமாய், நிஷ்களமாய், நிர்மலமாய், நிராமயமாய், நீங்காச் சுத்தமுமாய், தூரமுமாய், சமீபமுமாய், துரிய நிறைச் சுடராய், எல்லாம் நிலைத்திருந்த தாரகமாய், ஆனந்தமயமாகி, மனவாக்கிற்கெட்டா சித்துருவாய் நின்ற ஒன்றை, சுகானந்தப் பெருவெளியை சிந்தை செய்குவோம் என ஸ்ரீதாயுமான ஸ்வாமிகள் பாடியுள்ளார்.

**எல்லாம் நீ!**

## 15. மஹாவாக்கிய ஆராய்ச்சி

குழந்தாய்! இந்த மஹாவாக்கியத்தை அதிகம் விரித்துரைக்க வேண்டாம் என்ற தன்மையினால் அவன் உணர்த்த சுருக்கமான தன்மையில் கூறுகிறார், **தத் த்வம் அசி!** அது நீயாக இருக்கிறாய்! இதுவே உண்மைப் பொருள். இந்த மெய் உணர்வு பெற்றவன் அதுவாகவே ஆகி விடுகிறான். இதில் ஜீவாத்ம பரமாத்மாக்களிடையே உள்ள பேதத்தை நீக்கி விட்டு ஐக்கிய பாவனை கூட வேண்டும். எப்படி என்றால் மின்மினிக்கும் சூரியனுக்கும், வேலைக்காரனுக்கும் அரசனுக்கும், கிணற்றுக்கும் கடலுக்கும், அணுவுக்கும் மேரு மலைக்கும் முறையே ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள பேதம் களையப்பட வேண்டும்.

இந்த முரண்பாடான கருத்து உபாதி பேதத்தால் வந்தது. அதாவது அரசன் இராஜ்யம் அற்ற நிலையிலும், சேவகன் படைக்கலம் (ஆயுதம்) அற்ற நிலையிலும், மனிதன் என்ற தன்மை இருப்பார் போல் ஈசனை குறித்து மாயை சம்பந்தம் உள்ளவர் என்றும், மஹத்தான காரணம் உடையவர் வேறுபடுத்தி ஜீவனைக் குறித்து கார்ய ரூபமான பஞ்சகோச கர்த்தா என்றும், உபாதி பேதத்தால் இந்த பரமாத்மா ஜீவாத்மாக்களிடையே பேதம் நீக்கப்பட்ட போது ஜீவாத்மாவும் இல்லை பரமாத்வாவும் இல்லை. இந்த பேதம் அற்ற தன்மையினால் வேதம் ஆகிய

தானே ஸ்ரீபிரம்மத்தினிடத்தில் கற்பனை செய்யப்பட்ட துவைதம் என தள்ளப்படுகிறது. மேலே கூறிய உபாதிகள் நீக்கம் செய்தே ஆக வேண்டும். இந்த தூலப் பிரபஞ்சமும் உண்மை அன்று, சூட்சும பிரபஞ்சமும் உண்மை அன்று. இவை பழுதையில் (கயிற்றில்) காணப்பட்ட பாம்பு போலும், கனவில் கண்ட காட்சி போலும் கற்பனை செய்யப்பட்ட காரணத்தால் அவை உண்மை ஆகாது. அதன் பிறகு ஜீவாத்மா பரமாத்மாக்களிடையே எந்த ஒற்றுமை உள்ளதோ அது அறியப்பட வேண்டும். புறப் பொருள் ஆராய்ச்சியை விடுத்து அகப்பொருள் ஆராய்ச்சியில் ஜீவ ஈஸ்வரர்கள் இருவரும் ஒன்றே ஆகும், அங்கு பிளவு இல்லை. இதை ஜஹதீலக்ஷணை என்று ஈசனையும், அஜஹதீலக்ஷணை என்று ஜீவனையும் பேதப்படுத்தும் பேதத்தை ஒழித்து ஏகம் பிரம்மம் என்ற ஓர் நிலைப்பட வேண்டும்.

**ஜஹதீலக்ஷணையாவது:-** கங்கையின் கிராமம் அதாவது கங்கைக் கரையில் உள்ள கிராமம் என அர்த்தம். இதன் உள் கருத்து, கங்கை ஜலத்தை விட்டு கரையை ஏற்பதால் அந்த கிராமத்திற்கும் கங்கைக்கும் வார்த்தை அளவிலே பேதம். அதாவது கங்கைக்கும் கரையில் உள்ள கிராமத்திற்கும் பேதம் இல்லை.

**அஜஹதீலக்ஷணையாவது:-** சிவப்பு ஓடுகிறது, இந்த வார்த்தையில் சிவப்புக் குதிரை ஓடுகிறது என அர்த்தம். இதன் உட்கருத்து குதிரையில் உள்ள சிவப்பு வர்ணத்தை நீக்க முடியாது. சிவப்பை விடாமல் அந்த குதிரை கொள்வதால் பேதம் உண்டு. 'அதுவே நீ ஆகிறாய்' என்று பொருந்திய உணர்வோடு,

பொருந்தாத இயல்புகளை இரண்டினிடத்திலும் நீக்கி விட்டு ஒருமைப்பாட்டை காண வேண்டும். அதன் உபாதிகளை களைந்து கேவலம் ஸ்ரீசித் சொரூபமாக இரண்டும் ஒன்றென உணர்ந்து, பிளவுபடாத தன்மையினால் விவேகிகளினால் இந்த மஹாவாக்கியம் உணரப்படுகிறது. இவ்வாறு நூற்றுக்கணக்கான மஹா வாக்கியங்களால் ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியப்பான்மையில் உணர்த்தப்படுகிறது.

**எல்லாம் நீ!**

## 16. பிரம்மத் தியானம்

1. ‘இந்த தூலமும் இந்த உலகமும் நீயன்று’ என்ற உபநிஷத் வாக்கியங்களால் இந்த அனாத்ம பிரபஞ்சத்தை நீக்கி விட்டால், தானாகவே எங்கும் நிறைந்த ஆகாயத்தை போல தர்க்கம் செய்ய வேண்டிய அவசியமில்லாமல் உண்மை உறுதியாகிறது. மண்ணாலான குடம் எந்த நிமிஷமும் மண்ணேயாகும். அது போல சத்தாகிய பிரம்மத்திலிருந்து தோன்றிய இப்பிரபஞ்சம், சத்துக்குப் புறம்பாக ஒன்றும் இல்லாததால் அது உண்மைப் பொருளே, அதுதான் ஆத்மா. அமைதியானதும், மாசற்றதும், இரண்டற்றதுமான எந்த ஸ்ரீபரம்பொருள் உண்டோ அதுவே நீயாக உளாய்.

2. உறக்கத்தில் கற்பிக்கப்பட்ட இடம், பொருள், காலம், அறிபவன் எல்லாம் எப்படி பொய்யாகுமோ, அப்படியே விழிப்பு நிலையில் இந்த உலகு, உடல் அஞ்ஞானத்தால் அதாவது அறியாமையின் மயக்கத்தினால் ஆக்கப்பட்டிருப்பதால் சர்வமும் பொய்யே. இதன் இலக்கணமான உடல், இந்திரியங்கள், பிராணன், அஹங்காரம் பொய்யே. அமைதியானதும் ஆனந்தமானதுமான எந்த பொருள் உண்டோ, அதுவே நீயாக உளாய்.

3. எங்கு மதி மயக்கத்தால் கற்பிக்கப்பட்ட பொருள் தோன்றுகிறதோ அதனுடைய உண்மை நிலையை

அறியும்போது அந்த உண்மை நிலையாக உளது. அதனின்றும் பிரிந்து தோன்றியது இல்லவே இல்லை. கனவில் தோற்றப்பட்ட பல வகையான பொருள்களும் விழிப்பு நிலையில் காணப்படாதது போல உணர்ந்து உண்மையாய், சத்தாய், சித்தாய், அதுவே நீயாக உளாய்.

௪. ஜாதி, சேர்க்கை, குலம், கோத்திரம் ஆகியவற்றிற்கு அப்பால்பட்டதும் நாம ரூப குணம் குற்றம் அற்றதும், இடம் காலம் பொருள் அற்றதும் எதுவோ, அந்த பிரம்மமாய் நீ உளாய் என்பதை அனுஸந்தானம் செய்வாயாக.

5. எந்த பரம்பொருள் சொல்லுக்கும் செயலுக்கும் எட்டாததோ, எது உண்மை அறிவான கண்ணிற்கு எட்டுவதோ, எது அனாதி பொருளோ அந்த பிரம்மமாக நீ உளாய் என்பதை அனுஸந்தானம் செய்வாயாக.

6. பசி, தாகம், மூப்பு, சாவு, சோகம், மோகம் என்ற அறுவகையான பிறவிப்பிணிகளால் தொடரப்படாததும், யோகிகளின் உள்ளத்தில் தியானிக்கபட்டதும் இந்திரியங்களால் உணரப்படாததும், குற்றமற்றதுமான எது உள்ளதோ அந்த பிரம்மமாய் நீ உளாய் என்பதை அனுஸந்தானம் செய்வாயாக.

7. மதி மயக்கத்தால் கற்பிக்கப்பட்ட இந்த உலகின் பல பகுதிகளுக்கும் அடிப்படையாக இருப்பதும், ஜீவனாகிய தனக்கும் ஆஸ்ரயமாயிருப்பதும், அனைத்து காரண காரியத்திற்கும் புறம்பானதும் பிளவுபடாததும் எது

உள்ளதோ, அந்த பிரம்மமாக நீ உளாய் என்பதை அனுஸந்தானம் செய்வாயாக.

8. வளர்ச்சி, மாறுபாடு, தேய்வு, நோய், சாவு முதலியவை இல்லாததும், அழிவற்றதும், உலகின் ஆக்கம், காப்பு, அழிவு ஆகியவற்றிற்கு காரணமாக உள்ள ஸ்ரீபிரம்மமாக நீ உளாய் என்பதை அனுஸந்தானம் செய்வாயாக.

9. பேதமற்றதும், சத்தியம், ஞானம், அனந்தம் என்னும் லக்ஷணம் விலகாததும், அலையில்லாத சமுத்திரம் போல அசைவற்றதும், கட்டுக்கு அடங்காததும் பாகுபாடற்ற வடிவமான பிரம்மமாக நீ உளாய் என்பதை அனுஸந்தானம் செய்வாயாக.

10. ஏகம் சத்தாகியும், ஒன்றாகியும் இருந்து கொண்டு பலவாறாகப் பிரிந்த உலகத்திற்கு காரணமாவதும், வேறு காரணத்தை நிராகரிக்கும் மூல காரணமாயும், காரியமான உலகத்தையும் காரணமான மாயையையும் விட வேறானதும், தான் தானாக பிரகாசிப்பதும், எந்த பிரம்மம் உளதோ அதுவாகவே நீ உளாய் என்பதை அனுஸந்தானம் செய்வாயாக.

11. மாயையாகிய கற்பனை கடந்ததாயும், சிறுமை அற்றதாயும், அழிவற்றதாயும், பிரகிருதியை விட வேறானதாயும், உயர்ந்ததாயும், என்றும் உளதாயும், அழியாத ஆனந்த வடிவாயும் உள்ள பிரம்மமாக அதுவாகவே நீ உளாய் என்பதை அனுஸந்தானம் செய்வாயாக.

12. எந்த ஒன்று மதி மயக்கத்தால் நாம, ரூப, குணம், குறியாக தோற்றியதோ பொன்னைப் போல சுத்தமாயும், ஆபரணத்தைப் போல் பல வடிவமாகவும் தோற்றியது அந்த மூலப் பொருளாகிய பிரம்மமாக நீ உளாய் என்பதை அனுஸந்தானம் செய்வாயாக.

13. எந்த ஒன்று வேறொன்றில்லாமல் பிரகாசிக்கிறதோ, அவ்யக்தமான பிரகிருதிக்கும் அப்பால்பட்டதோ, உடல் தோறும் இன்பமயமான அந்தராத்மா வடிவில் எது உளதோ, சத் சித் ஆனந்தப் பொருளாய் எது உளதோ, அந்த பிரம்மமாய் நீ உளாய் என்பதை அனுஸந்தானம் செய்வாயாக.

மேலே கூறப்பட்ட இந்த பொருளை நிச்சயம் பண்ணப்பட்ட புத்தியினால் சுருதியின் பிரசித்தமான யுக்தியினாலும், ஐயம் திரிபு அற உள்ளங்கையின் நெல்லிக்கனிபோல உணர்ந்து, படைகளின் நடுவே ஓர் அரசனைப் போல உடல், உலக, கூற்று தத்துவங்களை ஒழித்து, உனது ஆத்மாவில் சர்வசதா இருந்து கொண்டு பிரம்மத்தில் கரைந்து விடுவாயாக.

**எல்லாம் நீ!**

# 17. வாஸனாக்ஷயம்

1. ஆத்மா அல்லாத உடலிலும், இந்திரிய கூட்டங்களிலும் நான், எனது என்ற பாவம் எதுவோ அவைகளை ஒழிக்க வேண்டும். புத்திக்கும் அதன் பரிணாமங்களுக்கும் சாக்ஷியாக இருக்கும் உன் அந்தராத்மாவை அறிந்து, ‘அந்த ஆத்மாவே தான்’ என்ற எண்ணத்தினால் மானம், அபிமானம் இவைகளைத் துறக்க வேண்டும்.

2. உடலையும், உலகையும் பின்பற்றிச் செல்லும் பொய் அறிவை உதறி, அதற்குரிய சாஸ்திர பந்தங்களை உதறி இயம நியம அனுஷ்டானங்களையும் உதற வேண்டும். உலக வாசனையாலும், உடல் வாசனையாலும், நூல் வாசனையாலும் ஒரு ஜீவனுக்கு உண்மையான ஞானம் உண்டாகாது. சம்ஸார சிறையினின்றும் விடுபட விரும்புபவனுக்கு பிரபல வாஸனையாகிய மண் ஆசை, பொன் ஆசை, ஆடவர் பெண்டிர் விஷய ஆசை இந்த மூன்றும் விலக்கப்பட வேண்டும்.

3. **அனாத்ம வாஸனையின் லக்ஷணங்கள்:** அபிமானம், அந்தஸ்து, கௌரவம், தற்புகழ்ச்சி, காமம், கோபம், லோபம், அஹங்காரம் முதலியன அற்றிருக்க வேண்டும்.

4. தானாகிய ஆத்மாவிலேயே மனம் நிலைபெறுவதால் யோகிக்கு மனம் அழிகிறது, அதாவது மனம் மஹத்தாகி

விடுகிறது. ஆகையால் ஆத்மாவின் மேல் ஏற்பட்ட வாஸனைகளை நீக்கி, நான் எனது என்ற அபிமானத்தை ஒழித்து அபயஸ்தானம் குரு செய்வாராக.

5. தமோ குணமானது சத்வம், ரஜோ குணத்தால் நீக்கப்படும். ரஜோகுணமானது சத்வகுணம் ஒன்றாலேயே நீக்கப்படும். சத்வகுணமானது நிர்க்குணத்தாலேயே நீக்கப்படும். ஆகையால் ஸத்வகுணத்தையே நிலையாகக் கொண்டு உன்னிடமுள்ள அத்யாஸ நீக்கத்தை குரு செய்வாராக.

6. பிராப்தம் என்ற மூன் வினைப்பயன் உன் உடலைப் போஷித்துக் கொள்ளும் என்று உன் மனதை திடமுடன் நிச்சயப்படுத்தி, கவலை இல்லாமல் தைரியமாக முழு முயற்சியுடன் உன்னிடம் உள்ள அத்யாஸ நீக்கத்தை குரு செய்வாராக.

7. நான் ஜீவன் அன்று, நான் பிரம்மம் என்ற தியானத்தால் அனாத்ம சிந்தனையின் மூலம் வாஸனை, வேதத்தால் அடைந்த உன்னிடமுள்ள அத்யாஸ நீக்கத்தை குரு செய்வாராக.

8. சுருதியாலும், யுக்தியாலும் அனுபவத்தாலும் நிறைந்த உன்னுடைய பரமாத்ம தன்மையை அடைந்து சைதன்ய பிரதிபிம்பத்தால் அடையப்பட்ட உன்னிடமுள்ள அத்யாஸ நீக்கத்தை குரு செய்வாராக.

9. கொள்ளுதலும், தள்ளுதலும் இன்மையால் ஞானிக்கு செயல் சிறிதும் இல்லை. பரமாத்மாவிடம் வேறு சிந்தனையற்று

நிலை பெறுவதால் இடையில் தோன்றி மறையும் உன்னிடமுள்ள அத்யாஸ நீக்கத்தை குரு செய்வாராக.

10. 'நீ அதுவாக உளாய்' என்ற வாக்கியங்களிலிருந்து உதித்த பிரம்மமும், ஜீவனும் ஒன்று என்ற அறிவால், பிரம்மத்திடம் ஆத்மா திடமாக நிலைபெற்று ஐக்கியமாவதற்காக அறியாமையால் உன்னிடமுள்ள அத்யாஸ நீக்கத்தை குரு செய்வாராக.

11. இந்த உடலில் நான் என்ற அபிமானம் மிச்சம் இன்றி அழியும் வரை, கவனமாக அடங்கிய சித்தத்துடன் உன்னிடமுள்ள அத்யாஸ நீக்கத்தை குரு செய்வாராக.

12. ஜீவனும், உலகமாகவும் தோன்றிய இவ்விரண்டின் தோற்றம் கனவின் காட்சியைப் போல் என்று தோன்றுமோ, அது வரை இடைவிடாது உன்னிடம் உள்ள அத்யாஸ நீக்கத்தை குரு செய்வாராக.

13. உலகத்திலிருந்து கொண்டும், உலக வியாபாரத்திலிருந்து கொண்டும், சப்தம் காட்சி இவைகளை கிரஹித்துக் கொண்டும் ஆத்ம மறதிக்கு விக்கினம் வராமல் சர்வசதா ஆத்ம ஸ்வரூபத்தையே புத்தியில் சிந்திப்பாயாக.

14. தாய் தந்தையரின் மல ஜலத்தில் தோன்றியதும், மல மாம்ஸ வடிவமாகிய இந்த தூலத்தை தீண்டத் தகாததை போல் தள்ளிவைத்து, பிரம்ம பாவனையில் நிலைபெற்று ஆத்ம ஸ்வரூபத்தையே புத்தியில் சிந்திப்பாயாக.

15. குடத்திலுள்ள ஆகாயம் பேராகாயத்தில் கலப்பது போல ஜீவாத்மாவை பரமாத்மாவில் லயிக்கச் செய்து பிரம்ம பாவனையுடன் மௌனமாக இருப்பாயாக.

16. அறிவு வடிவிலே பிரகாசிப்பதும், அடிப்படையாயும் உள்ள சதானந்த வஸ்துவாகி, பிண்டமாகிய உடலையும் பிரம்மாண்டமாகிய உலகத்தையும் மலத்தின் சட்டியைப் போல் ஒதுக்கி பரப்பிரம்மத்தில் உன்னை லயிக்கச் செய்து பிரம்ம பாவனையுடன் லயிப்பாயாக.

17. எப்பொழுதும் ஆனந்த வடிவாயிருக்கும் ஆத்மாவில் ஆனந்தமாக லயித்துக் கொண்டு, உடலில் ஏறி நிற்கும் 'நான்' என்ற எண்ணத்தை புகச்செய்த ஸூட்சும சரீரத்தை உதறிவிட்டு எக்காலத்திலும் எதிலும் பற்றற்ற ஆத்மாவாக ஆவாயாக.

18. உண்மையானதோ, ஆதியில் உள்ளதோ, நிஜ ஸ்வரூபமோ, அதுவேயாகி அறிவு மயமாயும், இரண்டற்றதாயும், ரூபமற்றதாயும் செயலற்றதாயும், ஆனந்த மயமாயும் உள்ளதெதுவோ அதை அடைந்து, தன் மேலே போடப்பட்ட நடிகன் என்ற வேஷத்தை களைவதுபோல் களைந்து ஆத்ம ஸ்வரூபம் ஆகுவாயாக.

அஹம்பாவத்தின் பொருள் எது எதில் திரிஸ்யமாய் காணப்படும், அதாவது நேத்திரத்தால் தோற்றப்படும் இந்த பிரபஞ்சம் நான் எனது என அஹங்காரத்தால் அனுபவிக்கப்படுகிறது, கனவிலும் அனுபவிக்கப்படுகிறது. இதை

சாக்ஷியாக அறிவது அந்தராத்மா, சாக்ஷியாகிய அந்தராத்மா சத் என்றும், அசத் என்றும் கூற முடியாது. மாறுபாட்டையும் உடல் உலகம் முதலிய எல்லாவற்றையும் அறியும் இது பகல் கனவிலும், உறக்கத்திலும், விழிப்பிலும் தெளிவாக மீண்டும் மீண்டும் உடலின் இயக்கத்தை நான், நான் என அறிகிறது. அபிமானத்தை போர்வையாக கொண்டது, ஆகையால் மாமிச பிண்டமாகிய சரீரத்தில் புத்தியால் கற்பிக்கப்பட்ட அபிமான ஜீவனிடத்திலும் (அந்தராத்மா) நான் என்ற எண்ணத்தை விட்டொழிப்பாயாக.

பிணம் போன்ற உடலைப் பற்றிய குலம், கோத்திரம், பெயர், வடிவம், தர்மம், ஆஸ்ரமம் இவைகளை ஒழித்து இல்லாமல் செய்தால் சூட்சும சரீரம் அழியும். எப்பொழுதும் ஒரே வடிவாக இருப்பவனும், அறிவு மயமானவனும், எங்கும் நிறைந்தவனும், ஆனந்த ஸ்வரூபனும், மாறுபாடு இல்லாதவனும் ஆகிய உனக்கு தூலத்தின் நிமித்தம் அபிமானமும், உலகின் நிமித்தம் அஹங்காரமும் இல்லாதிருந்தால் இந்த சம்சார பந்தம் ஓர் பசுவின் குளம்படி போன்றதாகும்.

தேகமே ஆத்மா என்றிருப்பவன் விஷய நாட்டத்தில் பற்றை வளர்க்கிறான். அந்த பற்று பிறவியின் வித்துக்கு காரணமாகிறது, ஒரு புருஷன் தன்னை ஆத்ம சொரூபன் என அறிந்துவிட்டால் எதை விரும்புவான்? எவருடைய சரீரத்திற்காக வருந்துவான்?

விஷய ஆசையாகிய காரியங்கள் வளர்வதால் அதற்கு விதையான அஹங்காரம் வளர்கிறது. காரியங்களை மறப்பதால்

விதை நாசமடைகிறது. விஷய வாசனை வளர்வதால் காரியமும், காரிய வளர்ச்சியால் வாசனையும் வாசனையால் புருஷனுக்கு ஸம்சார சுழலும் வளர்கிறது. ஸம்சார பந்தத்தை அறுப்பதற்கு வாசனையும் அதாவது தோற்றத்தையும், அதன் காரியத்தையும் விசாரியாது ஒழித்து விட வேண்டும். வாசனை, காரியம், அதனாலுண்டாகும் ஸம்சாரம் இந்த மூன்றும் அழியவேண்டுமானால் ஸத்பாவனை, எல்லாம் பிரம்மமே என்ற உறுதி திடப்படுவதால் ஆத்ம ஸாக்ஷாத்காரம் அடையலாம்.

சூரியன் உதிக்கும்பொழுது இருள் எப்படி மறைகிறதோ, அதே போல் நல்ல வாஸனையின் தோற்றம் தலையெடுக்கும் போது கிரிகையின் வாசனையும், அபிமான அஹங்காரமும் அழிகிறது. பிராப்த கர்மத்தின் தொடர்பு எஞ்சி இருக்குமேயானால், வெளிப் பிரபஞ்சத்தை அதாவது தோற்றும் நாம ரூப குணத்தை களைந்து, அதில் மயங்காமல் தனதாத்ம ஸ்வரூபத்தை விரித்து, ஆனந்தமே வடிவமான பிரம்மத்தை தனதாக தியானம் செய்துகொண்டு, அகக்கரண புறக்கரணங்களை அடக்கி, அதாவது எந்த காரண காரியத்தையும் விரித்து அதற்கு விடைகாணாமல் அமைதியுடன் காலத்தை கழிக்க வேண்டும். தன்னுடைய சொரூப ஸ்தானத்திலிருந்து ஒருகாலும் வழுவக்கூடாது, அதாவது இப்படி இருக்கலாமா? இது நமக்குப் பொருந்துமா? இதற்கு நாம் தகுதியா? என சந்தேக கிரந்தியை வரவழைத்து கவனக்குறைவு செய்யக் கூடாது. அந்த கவனக்குறைவே எமன் ஆகும்.

தன்னுடைய சொரூப ஸ்தானத்திலிருந்து நழுவுதலைக் காட்டிலும் ஞானிக்கு ஆபத்து வேறு ஒன்றும் இல்லை. அதுவே பந்தம், அதுவே துன்பம், அதுவே பிறவி. தன் சொரூபத்தை மறந்த புருஷனை விஷய வாசனை பற்றிக் கொள்கிறது. அவன் அனேக சாஸ்திரங்கள் கற்றிருந்தாலும் புத்தியின் தோஷத்தால் வெகுதூரம் சென்றுவிடுகிறான். ஒரு ஸ்திரீயானவள் ஓர் புருஷனை புத்தியைக் கெடுத்து நிலை தவறச் செய்வது போலவும், பாசி படர்ந்த நீர் கையால் விலக்கப்பட்ட நேரத்தில் தோற்றி மீண்டும் மறைந்து விடுவது போலவும் மாயையானது, புத்திசாலியாக இருந்தாலும் சலனத்தால் மூடிக் கொள்கிறது.

சிறிதளவு தன் லக்ஷியமாகிய பிரம்மமாகிய குறிக்கோளினின்று நழுவி வெளிநோக்கு உடையதாய் ஆகுமேயானால், மாடியில் இருந்து படிகளில் நழுவிய பந்து ஒவ்வொன்றாக தாண்டி தரையை அடைவதுபோல, விஷயங்களில் பற்றுக் கொண்ட மனமானது தொடர்ந்த சிந்தையினால் ஆசையும், அந்த ஆசையால் அதை அடையும் முயற்சியும் ஏற்படுகிறது. ஆகவே கீதையில் பகவான் சொல்கிறார்: ஏ பல்குணா! பொருள்களை உற்று நோக்குகிற புருஷனுக்கு அதன் விசாரணையினால் ஆசை உண்டாகிறது. அந்த ஆசையினால் பொருள் பற்று உண்டாகிறது, அந்த பொருள் பற்றால் அது கிட்டவில்லையானால் கோபம் உண்டாகிறது, அந்த கோபத்தால் அதை உறுதிப்படுத்தும் புத்தி நாசமாகிறது, அந்த புத்தி நாசத்தால் உண்மையை கிரஹிக்கும் அறிவு நாசமாகிறது. அறிவு நாசத்தால் அறிவு சொரூபமாக இருக்கும் அவன்

நாசமாகிறான். ஆகையால் மிகவும் ஜாக்கிரதையாக இரு என ஸ்ரீபகவான் கூறியுள்ளார்.

ஆகையால் விவேகமுள்ளவனாயும், மஹாசாந்தியை உடையவனாயும், எந்நிலையிலும் தன்நிலை மாறாதவனாயும், ஸ்ரீஸத்குருவை ஸ்ரீபரம்பொருளாக பார்ப்பவனாயும், பிரம்மத்தில் நழுவாது நிலை பெற்றவன் அதுவாகவே ஆவான். இது உறுதி. எல்லாக் கெடுதல்களுக்கும் காரணமான விஷய வாஸனையை ஒழித்து விடவேண்டும். இவ்வுடல் இருக்கும்போதே எவனுக்கு தான் தானாக இருக்கும் நிலை சித்திக்கிறதோ, அவனே உடல் விழுந்த பின்பும் முக்தனே. ஒரு சிறிதேனும் வேற்றுமையாக காண்பவனுக்கு **யஜுர் வேதம்** பயத்தைக் கூறுகிறது. பரம்பொருள் ஸ்தானத்திலிருந்து எவன் சிறிது நழுவினாலும் அவன் மிருத்யு (எம) பயத்தை அடைகிறான் என்று **தைத்திரிய உபநிஷத்** கூறுகிறது. எவன் வேதத்தாலும் சுருதிகளாலும் நூற்றுக் கணக்கான உணர்வுபூர்வமான வாக்கியங்களினாலும் விலக்கப்பட்ட பிரபஞ்சத்தை 'நான் என்னுடையது' என்ற பாவனையைப் பண்ணுகிறானோ, அவன் குற்றம் புரிந்த திருடனுக்கு ஒப்பாவான்.

அத்திருடனுக்கு ஓர் உவமானம் **சாந்தோக்ய உபநிஷத்தில்** கூறப்படுகிறது. அதாவது திருடனல்லாதவன் தன் ஸத்தியத்தை நிரூபிக்க ஒரு காச்சிய மழுவை எடுத்தால் அது அவனைச் சுடுவதில்லை. திருடன் எடுத்தால் சுடுகிறது. இதன் உட்கருத்தை ஸ்ரீகுருதேவர் உணர்த்துகிறார். காய்ச்சிய

மழுவை தொட்டால் கைதான் புண்பட்டுப் போகும், அதை காலக்கிரமத்தில் சுகமாக்கிவிடலாம். விஷய ஆசை என்னும் விஷம் பொருந்திய உலக ஆசை பந்தங்கள் கொடூரமான அக்கினிக்கு சமானமாகும். சாந்தமும் அமைதியும் கொண்டு பிரம்ம நிலையினின்று வழுவாதவனை அந்த அக்கினி சுடுவதில்லை. ஞானியானவன் பந்தத்திற்கு காரணமான பொய் உலக சிந்தனையை விட்டுவிட்டு, 'நான் உண்மை வஸ்துவாயிருக்கிறேன்' என்று ஆத்ம திருஷ்டியில் நிலை பெற்றிருக்க வேண்டும். வெளியுலக பழக்கம் கெட்ட வாசனையை உண்டு பண்ணி மேன்மேலும் பந்தத்தை வளர்க்கும். உண்மை அறிவால் இதை உணர்ந்து வெளியுலக வாசனையை விட்டுவிட்டு ஆத்மானுசந்தானம் செய்ய வேண்டும். வெளியுலக வாசனையை எவ்வளவுக்கெவ்வளவு ஒதுக்குகிறாயோ அவ்வளவுக்கவ்வளவு ஆத்ம சாக்ஷாத்காரம் கிட்டுகிறது. பிறவித் தளை அவிழ்கிறது. பொய்மையும் மெய்மையும் பிரித்து அறிந்து, வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டவனாய், உண்மை சாஸ்திரத்தை உணர்ந்தவனாய், முக்தியில் ஆசையுள்ளவனாய் சர்வ சதாவும் 'தான் ஆத்மா' என்ற பேருணர்வுடன் விளங்க வேண்டும்.

**எல்லாம் நீ!**

## 18. ஆத்மநிஷ்டை கூடும் முறை

அசையும் பொருள்களிலும், அசையாப் பொருள்களிலும், உள்ளும் புறமும் தன்னையே ஆதாரமாகக் கண்டு, அறிவின் சொரூபமாக தன்னை உறுதிசெய்து வெளியுலக தொடர்புகள் அனைத்தையும் நீக்கினவனாய், பிளவுபடாதவனாய், பரிபூரணானந்தனாய் எவன் நிலை பெற்றிருக்கிறானோ **அவனே ஜீவன் முக்தன், அதுவே ஆத்மநிஷ்டை.**

எல்லாவகையாலும் பந்தத்திலிருந்து விடுதலைக்கு வழி - சர்வாத்ம பாவனையைக் காட்டிலும் சிறந்ததாக எதுவும் கிடையாது. பார்க்கப்படும் பிரபஞ்சம் அனுபவரீதியில் ஒழிக்கப்படுமானால் ஆத்ம நிஷ்டையானானது தானே கூடிவருகிறது.

கீதையில் ஸ்ரீபகவான் சொல்வதாவது; ஞானத்தில் ஊறிய உள்ளம் உடையவன் எங்கும் சமநோக்கு உடையவனாய், ஆத்மாவை எல்லாப் பொருள்களிலும் உணர்பவனாய், எல்லாப் பொருள்களிலும் ஆத்மாவை காண்பவனாய், ஆனந்தமயனாக இருந்து ஆத்மநிஷ்டையை அனுபவிக்கிறான். இதையே ஸ்ரீதாயுமான ஸ்வாமிகள் பாடுகிறார்; ''எங்கெங்கு பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் அங்கங்குயிருப்பதுவும் நீயன்றோ பராபரமே'' என்றார். வெளியுலக காட்சிகளை தள்ளி

வைக்காமலும், தேகத்தையும் அதன் தொழில்களையும், நான் என்ற அபிமானத்தை உடையவனாயும், விஷயானந்தத்தில் பற்றுள்ளவனாய் இருக்கும் அவிவேகிக்கு, ஆத்மநிஷ்டை எவ்வாறு கூடும்? சம பார்வை, சமத்வம், சந்தோஷம், சாந்தம், சதானந்தம் நிறைந்த ஒருவனால்தான் ஆத்ம நிஷ்டை கூடப் பெறுகிறது. ஸ்ரீஸத்குருவிடமிருந்து சுருதி வாக்கியம் உபதேசம் பெற்றவனாய் உள்ள சந்நியாசிக்கு குரு அனுக்கிரஹத்தினாலும் தன் முயற்சியினால், சிரத்தையினால் தன் இந்திரியங்களை அடக்கியவனுக்கும், தெய்வ அனுக்கிரஹம் பெற்றவனுக்கும் சமாதி நிஷ்டை கூடுகிறது.

அஹங்கார வாசனைகள் எண்ணற்ற பிறவிகளில் வந்து வாய்த்தவையாதலின், சாதகன் சங்கல்ப விகல்பத்திற்கு இடம்கொடாமல் நிர்விகல்பத்திலேயே மனதை கரைத்து, அதாவது சமூத்திரத்தில் உப்பு பதுமையை ஆழம் பார்க்க கயிற்றில் கட்டி இறக்கினால் பதுமை மிஞ்சாமல் கயிறுதான் மிஞ்சும். அந்நிலையில் கற்பனைகளுக்கு இடங்கொடாமல், ஆத்ம சிந்தனையிலேயே தன்னை லயமாக்கிக் கொண்டவனுக்கு சமாதி நிஷ்டை கூடுகிறது.

சந்தேக குற்றமானது ஆபரண மயக்கத்தால் புருஷனை மோகிப்பித்து, அஹம் புத்தி என்ற மோகினிப்பேயுடன் கூட்டுவித்து, அந்த அஹங்காரத்தின் குணத்தால் ஆத்மாவை மூடிவிடுகிறது. அந்த ஆபரண சக்தி ஒழிக்கப்பட்டு விட்டால் சந்தேக குற்றம் தானே முடிகிறது. பார்க்கும் ஆத்மாவிற்கும், பார்க்கப்படும் பிரபஞ்சத்திற்கும், அன்னப்பட்சி போல்

பாலையும் நீரையும் பிரித்தெடுத்தால் போல், ஞானத்தால் பிரித்தெடுப்பவர்களுக்கு ஆவரண சக்தியானது தானே மறைந்து போகும். அவ்வாறு பிரபஞ்சம் பொய்யெனக் கண்டுவிட்டால் அங்கு ஆத்மநிஷ்டை தானே கூடும். தெளிவான ஆத்ம பிரகாசித்தல் உண்டாகும். பரிபூரண விவேகத்தினால் பார்ப்பவன், பார்க்கப்படுவது அதாவது ஆத்மா அனாத்மத் தத்துவத்தை பிரித்தறிந்து, மாயையாகிய தளைகளை அறுத்து விட்டால் மீண்டும் பிறவிப்பிணி இல்லை.

பரமாத்மாவும், ஜீவாத்மாவும் ஒன்று என்ற ஞானத்தீயானது அவித்தை என்னும் முள்வனத்தை சுட்டு எறித்து விட்டால் அங்கு அத்வைத பாவம்தான் நிலவும். இவனுக்கு தேகம் ஆத்மா என்ற புத்தி வராது, அதனால் நன்றாக ஆத்ம சாக்ஷாத்காரம் கிட்டியபின் ஆவரண சக்தியும் சந்தேக குற்றமும் நீக்கம் செய்யப்பட்டு ஆத்மநிஷ்டை தானே கூடுகிறது.

**எல்லாம் நீ!**

# 19. அடிப்படை பொருள் விளக்கம்

இரும்பானது அக்கினியுடன் சேர்வதால் பழுக்கக் காய்ந்து எரிக்கும் சக்தியைப் பெறுவதுபோன்று, புத்தியானது ஸ்ரீபரமாத்மாவின் சக்தியால் பிரதிபலிக்கப்பட்டதால் அறிவது, அறிவு, அறியப்படுவது என்ற திரிபிடி வடிவில் தோற்றப்படுகிறது. இந்த மூன்றும் பொய். இந்த மூன்றிலும் சித்தப்பிரமை, கனவு, மனோ ராஜ்யம் இந்த மூன்றும் காணப்படுவதால் அஹங்காரம் முதல் தேகம் வரையில் உள்ளதெல்லாம் விஷய சுகங்களால் பிரகிருதியின் வேற்றுமை வடிவங்களே அல்லாமல் உண்மை அல்ல. ஆத்மாவோ ஒரு போதும் மாறுவதில்லை.

'அஹம்' என்னும் பதத்தை குறிக்கும் அகப் பொருளானது ''அது இது'' என இரண்டற்றதாயும், பிளவுபடாததாயும், என்றும் உளதாயும், ஏக ரூபமாயும், சர்வ சாக்ஷியாயும், உளது இலது என்று விளக்க முடியாததாயும், எப்பொழுதும் விளங்குவதாயும் உள்ள ஸ்ரீபரமாத்மாவேயாகும். இவ்வாறு ஆராய்ந்து அறிபவன் பொய்யையும், மெய்யையும் பிரித்து தன்னுடைய ஞானக்கண்ணால் உண்மையை நிச்சயித்து, ஆத்மாவாகிய தன்னை அளவு கடந்த அறிவு மயம் என அறிந்து கொண்டு, அனாத்ம தளையினின்று விடுபட்டு தான் தானாக இருந்து மஹாசாந்தியை எய்துகிறான்.

**எல்லாம் நீ!**

# 20. ஸமாதி விளக்கம்

நிருவிகல்ப சமாதியால் பேதம் நீங்கிய ஸ்ரீபரமாத்ம சாக்ஷாத்காரம் எப்பொழுது ஏற்படுகிறதோ, அப்பொழுது சித்தையும் ஜடத்தையும் ஒன்றாக கருதிய இருதய முடிச்சானது பரிபூரணமாக அழிகிறது. நான், நீ, இது, அது என்ற கற்பனை புத்தியில் தமோ குணத்தாலும் ரஜோ குணத்தாலும் ஏற்பட்ட தோஷத்தினால் உதிக்கிறது.

இரண்டற்றதும், பேதமற்றதுமான பரமாத்ம சமாதியில் நன்றாக பிரகாசிக்கும் போது உண்மை உணர்வின் அனுபவத்தால் சகவாச தோஷம் அழிகிறது. மனதை அடக்கி அமைதி உள்ளவனாயும், புறக்கரணங்களை அடக்கியவனாயும், வெளி உலக சிந்தனை சற்றும் இல்லாதவனாயும், எப்பொழுதும் பிரம்மத்தில் சிந்தையை நிலை நிறுத்தியவனாயும் உள்ள ஞானி சர்வாத்ம பாவனையை அனுபவிக்கிறான்.

அவித்தையாகிய இருளால் தோற்றுவிக்கப்பட்ட விபரீத கூத்துக்களை சுட்டெறித்து விட்டு, செயலற்றவனாய் அதாவது மனோ வியாபாரம் அற்றவனாய், விபரீத எண்ணங்கள் அற்றவனாய் அதாவது மனதின் கற்பனை அற்றவனாய், ஸ்ரீபிரம்ம சொரூபியாய் பிரகாசிக்கிறான். புறக்கரணங்களையும், மனதையும், அஹங்காரத்தையும் அறிவு வடிவாகிய ஆத்மாவில்

கரைத்துவிட்டு ஆழ்ந்த அமைதியில் மௌனத்தைப் பெற்றவர்கள் எவர்களோ அவர்களே பிறவிப் பிணியை அறுத்து சமாதி அடைந்தவர்களாவர்.

சத்தாகிய பிரம்மத்திடம் பற்றுள்ளவன் வேறொன்றை நாடான். எப்படி என்றால் குளவியால் அடைக்கப்பட்ட புழு, குளவியின் எண்ணத்திலேயே இருந்து குளவி ஆவது போல, ஜீவத் தன்மை கழன்று அதாவது ஆவரண மயக்கமும் சந்தேக குற்றமும் நீங்கியவன் பிரம்மமாகவே பிரகாசிக்கிறான். பரமார்த்த தத்துவமானது நுட்பமானது, பிரபஞ்சமாக காணும் போக்கால் அடைவதற்கு இயலாது. பரிசுத்தமான புத்தியுடையவன், பேத நாட்டம் இல்லாதவன் அறியக்கூடியதாகும். எவ்வாறு தங்கமானது நன்றாக புடம் போடப்பட்டு சுத்தமாக்கிவிட்டால், சுயம் பிரகாசமான குணத்தை அடையுமோ அத்தன்மை போல் மனமானது உண்மையின் உறுதியான நம்பிக்கையால் முக்குணங்களின் அழுக்கை அகற்றி விட்டால் சுத்த சமாதி நிலையை அடைகிறது. இடைவிடாத அப்பியாச வசத்தால் இங்ஙனம் பக்குவமடைந்த அந்த மனது பிரம்மத்தில் எப்பொழுது லயமாகிறதோ, அப்பொழுது எதிரிடையான எண்ணங்கள் நீக்கிய சமாதியில் ஆனந்தம் தானே உண்டாகிறது. கேட்பதை விட சிந்திப்பது நூறு மடங்கு சிறந்தது.

சிந்திப்பதில் ஆத்ம தத்துவத்தை உணர்ந்து சிந்தித்தல் அதனினும் லக்ஷம் மடங்கு சிறந்தது. அதில் நிலைபெற்ற சமாதி அளவில்லாச் சிறப்பு உடையது.

கீதையில் ஸ்ரீபகவான் சொல்கிறார்: ஏ பார்த்தா! தனிமையை நாடியவனாய், உண்டியை சுருக்கியவனாய், மனம் வாக்கு காயங்களை அடக்கியவனாய், எப்பொழுதும் உலக ஆச்சார கற்பனைகளை குறைத்தவனாய், திட வைரக்கியத்தைக் கொண்டு கர்வம், அஹங்காரம், ஆசை, கோபம், பயம், பரிகாரம் முதலியவைகளை ஒழித்து, நான் எனது என்ற எண்ணமில்லாதவனாய், மன அமைதியும், அதில் சாந்தியும் அதில் மௌனமும் அடைந்தவன் பிரம்ம சொரூபமாவான்.

தனித்திருத்தல் இந்திரிய கருவிகளை ஒடுக்குவதற்கு சாதனம் ஆகும். இந்திரியங்கள் ஒடுங்கினால் அதாவது பார்ப்பது, கேட்பது, நுகர்வது, சுவைப்பது, உணர்வது, பேசுவது இவை சத்தாக இருந்தால் அஹங்காரம் அழியும். அஹங்காரம் அழிந்தால் ஆனந்தம் உண்டாகும். ஆனந்தம் அடக்கமாகும், அடக்கம் மௌனமாகும், மௌனம் பிரம்மமாகும்.

**எல்லாம் நீ!**

## 21. வாக்கை மனதில் அடக்கு

எண்ணங்களை குறைக்க வேண்டும். நாம ரூபங்களை விசாரணை செய்யாது விட்டு விடுதல், அதன் காரண காரியங்களை விசாரியாது மனதை அடக்குதல், உதாரணமாக மலை போன்ற தங்கத்திலிருந்து சிறிதளவு தங்கத்தை பிரித்தெடுத்தால் இரண்டும் தங்கமே, ஆனால் உருவத்தில் சிறியவை பெரியவையாக இருக்கலாம். அந்த சிறிதளவு தங்கத்தை ஆபரணம் ஆக்கினால் தங்கம் என்ற நாமம் அகன்று, ஆபரணத்தின் பெயர் நிலைபெறுகிறது. இத் தன்மையினதே உலக தோற்றமும் ஆபரணம் என்பது ஆகும். அதன் இயக்கம் அதாவது அது அணியும் இடம், அதாவது இடத்தை மாற்றி அணிய முடியாது. அத்தன்மையானதே உலகின் இயக்கமும் குணத்துடன் பொருந்தும் பொருள்களும், அந்த பொருத்துதலும் பொருந்துதலும் ஒழிந்துவிட்டால் இயக்கத்தால் வரும் வார்த்தைகளும் அடங்கி விடுகிறது. அதாவது இயக்கமாகிய மனதில் கற்பனை நாமங்களாகிய வார்த்தைகள் அதாவது வாக்கு ஒடுங்கி விடுகிறது.

**எல்லாம் நீ!**

## 22. மனதை புத்தியில் அடக்கு

சங்கல்ப விகல்பத்திற்கு ஏதுவாகிய மனதை விட, நிச்சயம் செய்கின்ற புத்தியே சூட்சுமம் என்றபடி, கற்பனையினால் பெருகுகின்ற மனதின் நாம ரூபங்களை மறந்து, அதை நிச்சயப்படுத்துகின்ற புத்தியை அதாவது பிரம்மாவை, அதாவது சிருஷ்டியை, அதாவது ஜலத்தில் பிரதிபலிக்கும் சந்திரனை நோக்காமல், அதிஷ்டான சந்திரனை, நோக்குதல் அதாவது ஜலத்தில் தோன்றும் சந்திரனை புத்தி உருவகப்படுத்துவதால் அதை விடுத்து ஆகாயத்தில் தோற்றும் சந்திரனை அதாவது கூடஸ்த பிரம்மமாக உணர்ந்து (ஜீவகளை களைதல்) மயமாகுதல் மனதை புத்தியில் அடக்கும் முறையாகும்.

**எல்லாம் நீ!**

## 23. புத்தியை பிரத்யேக ஆத்மாவில் ஒடுக்கு

ஆபரணத்தை புடம் போட்டு சுத்தப்படுத்தி சுத்த தங்கமாக்கினால் அதற்கு எந்த ஆபரணத்தின் பெயரும் பொருந்தாது. அது தங்கமே! அத்தன்மைபோல் நாம ரூபத்தை விடுத்து, இயக்கத்தை மறந்து, அதன் குணமயமான தன்மையைத் துறந்தால் ஜீவகளை களைந்த ஆத்ம ஸ்வரூபம் ஆகலாம், இதுவே ஒப்புயர்வற்ற சாந்தி ஆகும்.

விவேகமும் வைராக்கியமும் ஒரு புருஷனுக்கு இரு இறக்கைகளைப் போன்றதாகும். மூக்தியாகிய **பரவெளியை** அடைவதென்றால் இந்த இரண்டு இறக்கையினால் தான், ஓர் பறவையைப் போல பறந்து சென்று அடையமுடியும். வைராக்கியம் உள்ளவனுக்கு சமாதி நிலை கிட்டும். தத்துவ ஞான விசாரணையே விவேகமாகும். இந்த விவேகத்தினால் சொரூப சாக்ஷாத்காரம் அடையலாம். இந்த இரண்டினாலும் விடுதலை பெற்று பறந்தவனே பிரம்மானந்தத்தை அடைகிறான்.

தன்னடக்கம் உடையவனுக்கு பரமானந்தத்தைத் தரக் கூடியது விவேக வைராக்கியத்தைத் தவிர வேறு மார்க்கம் இல்லை. அழிவில்லாத மூக்தியை அடைவதற்கு இதுவே வாசற்படியாகும். ஆகவே அகப்பற்றையும் புறப்பற்றையும் விட்டு விடு. ஹிரண்யகசிபு போல் உலகம் அனைத்தையும் அடக்கி

கீர்த்தி, புகழ் வாங்கி இருந்தாலும், உன் கருவிகளை அடக்கி அவைகளுக்கு கோன் ஆகி இருந்தால் உள்ள பிரம்மானந்தம் அதில் லபிக்காது. விஷம் போன்ற விஷய ஆசைகளை விட்டு விடு. இந்த விஷய ஆசையே உன் ஆத்மாவை மரண குழிக்கு இழுத்துச் செல்கிறது. ஜாதி, குலம், அபிமானம், அந்தஸ்து, புகழ், பதவி, கௌரவம் முதலியவற்றையும் அதன் செயல்களையும் விட்டுவிட்டு அதன் அபிமான கர்த்தாவாகிய நான், எனது என்ற தேகாத்ம புத்தியையும் விட்டு விட்டு, சாந்தியாய், ஆனந்தியாய், மௌனியாய் சுகித்திருக்கக் கடவாய்.

**எல்லாம் நீ!**

# ௨௯. தியானம் செய்யும் முறை

1. லக்ஷிய குறியாகிய ஸ்ரீபிரம்மத்தை மனதில் மிகவும் திடமாக நிறுத்தி, வெளி இந்திரியங்களை அவற்றின் இடங்களில் நிலைபெறச் செய்து, அசைவற நிறுத்தி, தூல ஸம்ரக்ஷணையைக் கவனியாது பிரம்மத்திடம் ஐக்கியமாகி, ஆத்மாவை ஒன்றுபடுத்தி தன்மயமாக்கி, இடைவிடாத தியானத்தால் எப்பொழுதும் உனக்குள்ளே பொங்கி வரும் பிரம்மானந்த ரஸத்தைப் பருக வேண்டும். விஷய சிந்தனைகளை விஷம்போல் கருதி, அவற்றில் பிரவேசிக்கும் மனதை தடுத்து நிறுத்தி, உலக கற்பனைகளைக் குறைத்து ஆனந்த வடிவான ஆத்மாவை தியானம் செய்வாயாக.

௨. இந்த ஆத்மா சுயமாகப் பிரகாசிப்பது, அனைத்தையும் சாட்சியாக பார்த்துக் கொண்டிருப்பது, பஞ்ச கோசங்களுக்கும் அப்பாலாயுள்ளது, அதையே உன் ஸ்வரூபமாக இடைவிடாமல் தியானம் செய்வாயாக.

௩. இந்த பரமாத்மாவில் நிலையாக மனதை நிறுத்தி, அஹங்காரத்தினால் வரும் எண்ணங்களை தூலத்தை குடம் துணி முதலியவைகளைப் போல் ஒதுக்கி விசாரியாமல், தான் அதில் சம்பந்தம் கொள்ளாமல் உறுதியான ஆத்ம தியானத்திலேயே நிறுத்த வேண்டும். அப்பொழுதுதான்

ஸ்ரீஆத்ம தரிசனமானது சித்திக்கும். அதாவது பரிசுத்தமான அந்தக்கரணத்தை சாட்சியாகவும், ஞானமாத்திரமாகவும் உள்ள தனது ஸ்வரூபத்தில் ஆட்படுத்திக் கொண்டு, மெதுவாக அசைவில்லாத நிலைக்கு கொண்டு வந்து பிறகு பரிபூரணமாக தனது நிலையை தொடர்ந்து அனுபவிக்க வேண்டும். தனது அஞ்ஞானத்தால் கற்பிக்கப்பட்ட தேகம், பிராணன், இந்திரியம், மனது, அஹங்காரம் முதலிய எல்லா உபாதைகளிலும் இருந்து விலகி அகண்டானந்தமாய் எங்கும் நிறைந்திருக்கும் ஆத்மாவை பேராகாயத்தைப் போல் பார்த்து அனுபவிக்க வேண்டும்.

குடம், செம்பு, குதிர் முதலியவைகளிலும் உள்ளும் புறமும் ஒரே ஆகாயமே வியாபித்திருக்கிறது. அது விதவிதமான ஆகாயமன்று. அதைப்போல் ஸ்ரீபரம்பொருளும் சர்வ வியாபகமாக இருந்தாலும் ஒன்றேயாகும். உன் மதி மயக்கத்தால் கற்பனை செய்யப்பட்ட பொருள் உண்மையை விசாரித்து அறியும்கால் அது அதுவாகவே ஆகிறது. அது பிளவுபட்டதாக தெரிவதில்லை. பிளவுபட்டது கற்பனையின் வடிவே, மதி மயக்கத்தால் திருஷ்டியில் சர்ப்பமாக காணப்பட்டது. மதி மயக்கம் நீங்கியவுடன் கயிறாகவே தோற்றுகிறது. இந்த மதி மயக்கம் கற்பனையினால் உண்டாவதால் உலகின் கற்பனைகளைக் குறைத்து ஆத்ம ஸ்வரூபம் ஆக வேண்டும். தாமே பிரம்மா, தாமே விஷ்ணு, தாமே சிவன், தாமே இந்திரன், தாமே தேவர்கள், தாமே உலகம், தாமே சகல ஜீவர்களும், தாமே உள்ளும் புறமும், தாமே திசைகள், தாமே மேலும் கீழும் என உணர வேண்டும். எப்படியாயின் அலை,

நுரை, சுழல், குமிழி, துளி என நாமம் வேறுபட்டாலும் அது சமுத்திரமே, அதை அன்றி வேறு இல்லை என உறுதி வேண்டும். அந்த உறுதி நிச்சயமே ஆத்ம ஸ்வரூபமாகும்.

வாக்குக்கும், மனதுக்கும் பிடிபடும் இந்த உலகம் அனைத்தும் பிரம்மமே. பிரகிருதியின் எல்லையைக் கடந்து நிற்பவனுக்கு பிரம்மத்தைக் காட்டிலும் வேறானதில்லை. மண், கலசம், குடம், பானை, பாத்திரங்கள் உபாதி பேதத்தால் நாமம் வேறுபட்டாலும், பேதம் நீங்கிய காலத்தில் மண்ணேயாகும். அதுபோல மாயையாகிய மதுவால் மதி மயக்கத்துடன் கண்ட உலக நாம ரூப குணம், மதி மயக்கம் நீங்கியவுடன் ஆத்ம ஸ்வரூபமாகிய பிரம்மமாகவே உணரப்படும். உலகப் பொருளின் மதுவைக் குடித்து மதி மயங்கியவன், நான் என்னுடையது என உளறுகிறான். மதி மயக்கம் நீங்கிய உடன் பேச்சை குறைத்து விடுகிறான். பொய்யான அத்யாசம் நீங்குவதற்காகவே ருக் வேதம் ''எங்கும் வேறொன்றில்லை'' என விணைச் சொற்களை கோஷித்து, மீண்டும் மீண்டும் உபயோகித்து 'தாம்' ஆன தன்மையில் மஹா மௌனமாகி விடுகிறது.

எங்கு வேறொன்றை காண்பதில்லையோ, எங்கு வேறொன்றை கேட்பதில்லையோ, எங்கு வேறொன்றை அறிவதில்லையோ, அங்கு அந்த ஒன்றைத் தவிர வேறொன்றில்லை. ஆகாயத்தைப் போல மாசற்றதாயும், அசைவற்றதாயும், எல்லையற்றதாயும், மாறுபாடற்றதாயும், உள் ஒன்றும் வெளி ஒன்றும் இல்லாததாயும், தனக்குத் தானே விளங்குவதாயும் உள்ள பிரம்மத்தை அறிந்தபின் அறிய

வேண்டியது வேறு என்ன இருக்கிறது. ஜீவன் உண்மை வடிவில் பிரம்மமே, விசாலமான இந்த உலகமனைத்தும் பிரம்மமே வேதத்தினின்றும் பிரம்மம் வேறுபட்டதன்று. ''நாமே பிரம்மம்'' என்ற உறுதியில் இந்த வெளி மயக்கத்தைத் துறந்தவனாய் தெளிவடைவாயாக. எப்பொழுதும் அறிவு சொரூபமாக இருப்பாயாக.

குழந்தாய்!

கோடிக்கணக்கான நூல்களிலும், உபநிஷதங்களிலும் சகல மஹான்களும் எதை சொல்கிறார்களோ அதை ஒரே ஸ்லோகத்தில் கூறுகிறோம் உணர்வாயாக. **''பிரம்மம் ஸத்யம் ஜகத் மித்தை''** (உலகம் பொய், பிரம்மம் மெய்). பிணம் போன்ற உடலை மனிதன் எது வரை போற்றி வாழ்கிறானோ, அது வரை அவன் அசுத்தமானவனாவான். அவனுக்கு இந்த உலகில் பகைவர்கள் உண்டு. பிறப்பு, இறப்பு, நோய், துன்பம் உண்டு. பரிசுத்தமான ஆத்மா தான் என எப்பொழுது அறிகிறானோ அப்பொழுது சகல துன்பங்களிலிருந்தும் விடுபட்டவனாகிறான். சரீரத்தில் பற்று இல்லாதவனை விருப்பு, வெறுப்பு பற்றமாட்டா. ஆத்மாவை அறிந்தவனே சோகம், மோகம், கோபம், பயம், ஆசை கடந்தவனாவான்.

**எல்லாம் நீ!**

## ௨5. ஆத்ம சிந்தனை

1. இன்னதென சொல்ல முடியாத ஒப்பற்றதும், விழிப்புடையதும், ஆனந்த மயமானதும், கடல் போன்றதும், கரையற்றதும், தளைகள் அற்றதும், எல்லையற்றதும், ஆகாயம் போல் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரண பிரம்மத்தை ஞானி தம் இருதய கமலத்தில் சாக்ஷாத்கரிக்கிறான்.

௨. காரண காரியங்கள் அற்றதும், கற்பனை கடந்தழித்ததும், ஒரே வடிவமானதும் ஐம்புலன்களுக்கு எட்டாததும், வேத வாக்கினால் சிந்திப்பதும் ஆகிய பரிபூரண பிரம்மத்தை ஞானி தன் இருதய கமலத்தில் சாக்ஷாத்கரிக்கிறான்.

௩. அழிவற்றதும், விகல்பங்களற்றதும், நித்திய பொருளாயும், நாம ரூபமற்றதும், குணவிகாரமற்றதும், அமைதியே வடிவானதும் ஆன பரிபூரண பிரம்மத்தை ஞானி தம் இருதய கமலத்தில் சாக்ஷாத்கரிக்கிறான்.

௪. ஜடபரதோபாக்கியானத்தில் பரதமுனி சொல்வதாவது: ‘‘பிரவர்த்தியால் ஸம்ஸார சாகரத்தைத் தாண்ட முடியாது. நிவர்த்தி அதாவது **‘போதும்’** என்ற திருப்தியால் ஸம்ஸார சாகரத்தை தாண்ட முடியும்’’.

**எல்லாம் நீ!**

## 26. காணும் உலகை கழித்தல்

மனிதனுடைய நிழலைப் போல முன் வினை அனுபவத்தால் தோற்றமாத்திரமாக காணும் இவ் உலகையும், இந்த உடலையும் தூரமாக ஒதுக்கிவிட்டவன் திரும்ப பற்றிக் கொள்ள மாட்டான்.

எப்பொழுதும் அறிவுமயமானதாயும், ஆனந்தமயமாகியும் இருக்கும் தனதாத்மாவில் லயித்து, அழுக்காயும் மல உடலாகிய இந்த தூலத்தை ஒதுக்கி வைத்துவிடு, அதை நினைக்காதே. வாந்தி எடுத்த பொருள் ஞாபகத்திற்கு வந்தால் அவை அருவருப்பே! "கக்கினது பாயாசம் ஆனாலும் அதை நக்குவாறும் உண்டோ?" வேருடன் இந்த பிரபஞ்சத்தை பிடுங்கி எறிந்துவிடு. பிரபஞ்ச கற்பனையை விட்டு பிரம்ம கற்பனையை பெருக்கு. நீ அதுவானால் அந்த கற்பனையும் ஒழிந்துவிடும். அளவு கடந்த ஆனந்த வடிவான ஆத்மாவை அறிந்து கொண்ட பின், எக்காரணத்திற்காக இத்தூலத்தை போஷிப்பான் உண்மை ஞானி.

**எல்லாம் நீ!**

## ௨7. ஞானத்தின் பயன்

1) உடல் இருக்கும்போதே முக்தி அடைந்தவன் தன்னிடத்திலே அகத்தும் புறத்தும் ஆனந்தமாக இருப்பதே பயன்.

௨) வைராக்கியத்தின் பயன் ஞான விழிப்பு. ஞான விழிப்பின் பயன் விஷய ஆசையினின்று விலகுதல். விஷய ஆனந்தத்தை விடுத்து ஆத்மானந்தத்தை அனுபவிப்பதே கடல் போன்ற தனதாத்ம ஞான பயன்.

௩) படிப்படியாக பின்பு நிகழவேண்டியது நிகழவில்லையானால் பூர்வம் முந்தைய படிகள் பயனற்றவை என உணர்க. அதாவது விஷய இச்சைகள் அடங்கினால் முந்தைய அனுபவம் முற்றுப் பெற்றதென உணர்க. பின்பு தேடுவதற்கு அறிவில்லாதது என்ற திருப்தி, நிவர்த்திக்குப் பயன். தனக்குள்ளே ஒப்பற்ற ஞானத்தின் பயன்.

௪) பிராப்தவசமாய் வரும் துன்பங்களில் மனக் கலக்கம் இல்லாமல் ஆனந்தமாயிருப்பதும், வெறுக்கத்தக்க கர்மா ஞான முதிர்ச்சியானதும் அது தானே நின்று விடுகிறது. இதுவே ஒப்பற்ற ஞானத்தின் பயன்.

5) கயிற்றைக் கண்டு பாம்பு என அடிக்கப் போனவன் கயிறு என தெரிந்து கொண்ட பின், அடிக்கும் முயற்சியை விட்டு விடுவான். ஹிருதயத்திலுள்ள அஞ்ஞான முடிச்சின்

அழிவானது முழுவதும் அழிந்த போது அவனுக்கு உலக பிரவர்த்திகள் தாமே குறையும். போக்கிய வஸ்துக்களில் பிடிப்பு இல்லாமல் இருக்குமேயானால், அதுவே வைராக்கியத்தின் எல்லை என உணர். மனோவிருத்தி ஆனந்த மயமானால் மனம் அழிந்த நிலை என உணர், இதுவே ஞானத்தின் பயன்.

**எல்லாம் நீ!**

# ௨௮. ஜீவன்முக்தன் லக்ஷணம்

1. தம் சுய நிலையிலிருந்து அணுவும் குறையாமல், சர்வசதா ஆனந்த மயனாய், வெளி விஷயங்களைப் பொருட்படுத்தாமல் உறங்குபவனை போலும் அறியாக் குழந்தையைப் போலும், பிறர் கொடுக்கும் அன்ன பானம் முதலியன மட்டும் உண்பவனாய், கனவின் நிலையில் உலகை காண்பவனாய், அளவில்லா பிறவிகளில் செய்த புண்ணியத்தின் பயனால் அந்த மோக்ஷ ஆனந்தத்தை அனுபவிப்பவன் பாக்கியவான். உலகில் அவனே எல்லோராலும் பூஜிக்கத் தகுந்தவன், அவனே **ஜீவன்முக்தன்.**

௨. பிரம்மத்திலேயே சதா மனதை லயப்படுத்தினவனாயும், சுக துக்கத்தை பொருட்படுத்தாமல் மனோ விகாரம் அற்றவனாயும், செயலற்றவனாயும் சதா ஆனந்தத்தை அனுபவிப்பவனே **ஜீவன்முக்தன்.**

௩. சிரவண மனன நிதித்யாசனத்தால் உபாதிகள் நீங்கியவனாய், ஜீவாத்மா பரமாத்மாக்களிடையே ஒருமைப்பாட்டைச் செய்தவனாய், உலக கற்பனை கடைன்றவனாய், சுயம் பிரகாச அறிவே உருவமானவனாய், போக்கு வரவுகளில் மயங்காதவனாய் உண்மையில் நிலை பெற்ற மனத்தினனாய் நிலை பெற்றவனே **ஜீவன்முக்தன்.**

4. மனம் லயித்தவனாயும், விழிப்பு நிலையில் செயலற்றவனாயும், செயலில் களங்கமற்றவனாய், ஆனந்தானுபவம் முடிவின்றி நிலையானவனாய், ஐம்புலன்களில் அறியப்படும் உலகை மறப்பவன் எவனோ அவனே **ஜீவன்முக்தன்.**

5. இந்திரியங்கள் விழிப்புடனிருந்தாலும், மனம் பிரம்மத்தில் லயித்தபடியால் இந்திரியங்களால் விஷயங்களை பற்ற முடிவதில்லை. அந்த காரணத்தினால் ஜாக்ரத்தில் தர்மம் இல்லை. ஒரு சமயம் கிரஹித்தாலும் திடமான விவேக வலிமையால் விருப்பு வெறுப்பற்று விழிப்பு நிலை கூடுகிறது. அதில் உலக வாசனை கூடுவதில்லை. அதில் ஸம்ஸார கவலை இல்லாதவனாய், கலைகள் யாவும் அறிந்திருந்தாலும் கலைகள் ஏதும் இல்லாதவனைப் போல் வெளிப்போக்கு இல்லாதவனாய் உள்ளவனே **ஜீவன்முக்தன்.**

6. எப்பொழுது நிச்சயமாக இந்திரியங்கள் நாடும் பொருளில் பற்று கொள்ளவில்லையோ, செய்யும் கர்மாவிலும் பற்று கொள்வதில்லையோ அவன் **யோகா ரூடன்** என கீதையில் ஸ்ரீபகவான் சொல்கிறார். நிழலைப் போல தேகம் தொடர்ந்து வந்து கொண்டிருந்தாலும், தேகத்தில் நான் எனது எனப் பற்றுதலை விட்டவன் **ஜீவன்முக்தன்.**

7. கடந்து போனதை பற்றி சிந்தியாதவனாயும், வரப்போவதைப் பற்றி கவலை கொள்ளாதவனாயும், நிகழ்வதைப் பற்றி கற்பனை செய்யாதவனாயும் ஒப்பற்றவனே **ஜீவன்முக்தன்.**

8. இயற்கையாகவே குணதோஷத்தினால் ஒன்றுக்கொன்று வேறுபடுவதும் நல்லதும் கெட்டதும் நிறைந்ததும் ஆகிய இவ்வுலகில் எங்கும் சமமாக பார்ப்பவனே **ஜீவன்முக்தன்.**

9. விரும்புவதும் வெறுப்பதுமான பொருள்கள் தோற்றினாலும் அவை மனதின் திரிபு எனவும், அவை பொருளின் திரிபு அல்ல எனவும் உணர்ந்து சம சித்தனாய் ஆனந்திப்பவனே **ஜீவன்முக்தன்.**

10. எவன் இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக பார்ப்பவனோ, எவன் பொன்னையும் மண்ணையும் சமமாக பார்ப்பவனோ, எவன் இகழ்வதையும் புகழ்வதையும் ஒன்றாக கொண்டவனோ, எவன் மானத்தையும் அவமானத்தையும் சம பாவனை செய்பவனோ, எவன் மித்திரனிடத்திலும் சத்ருவிடத்திலும் சமத்துவம் நிறைந்தவனோ, எவன் ஆசை வசப்பட்டு கருமங்களை செய்யாதிருக்கிறானோ அவனே **ஜீவன்முக்தன்.**

11. பிரம்மானந்தத்தின் ருசியை அனுபவிப்பதில் ஆழ்ந்த சிரத்தை உடையவனாய் உள்ளும் புறமும் நடைபெறும் நிகழ்ச்சிகளை அறியாதவனாக எவன் இருக்கிறானோ அவன் **ஜீவன்முக்தன்.**

12. உடலாலும் இந்திரியங்களாலும் உலகில் செய்யும் காரியங்களில் நான் எனது என்ற எண்ணமில்லாமல், சகலத்தையும் பார்த்துக் கொண்டு சம்பந்தம் இல்லாத

சாட்சியைப் போல் எவன் இருக்கிறானோ அவனே **ஜீவன்முக்தன்.**

13. நல்லவர்களால் ஒருவன் பூஜிக்கப்படும் போதும், தீயவர்களால் ஒருவன் பீடிக்கப்படும் போதும் எவனுக்கு சமபாவனை ஏற்படுமோ, பிரம்ம தத்துவத்தை உணர்ந்தவனுக்கு இன்பதுன்பம் எவனுக்கு தோற்றாதிருக்குமோ அவனே **ஜீவன்முக்தன்.**

முந்தைய வாசனையின் வேகத்தால் இவன் விஷயங்களில் சஞ்சரிக்கிறான் என்று சொல்வதானால், அப்படி சொல்லக் கூடாது.

**எல்லாம் நீ!**

## ௨௧. பிராப்தம்

வாசனையானது பிரம்மத்துடன் ஒன்றிய தன்மையினால் அழிந்து போகிறது. எப்படி என்றால் மிகவும் காமம் உடையவனும் கூட தாயின் முன்னிலையில் காமம் தடை பெறுகிறது அல்லாது, ஆனந்த வடிவான பிரம்மம் அறியப்பட்டால் அப்படி அறிந்தவனுக்கு உலக வியாபாரம் தடைபடும். விஷமாகிய விஷயாதிகள் அவனை தாக்காது.

மனதை ஓர்முகப்படுத்தி நிதித்தியாசனம் (சிந்தித்தல்) பழகுவதில் முயற்சி உடைய புருஷனுக்கு வெளி விஷயங்களின் தோற்றம் காணப்படுகிறது. இவ்விதம் தியானம் செய்யும் புருஷனுக்கு முயற்சியின்றியே சுக துக்க அனுபவ பலன் தோற்றப்படுகிறது. இந்த சுக துக்க பலனை வேதம் பிராப்தம் என்று சொல்கிறது. இதை உபநிஷத் வாக்கியம் எப்படி சொல்கிறது என்றால் பூர்வ புண்ணியத்தாலும், சத்சங்கத்தாலும் ஸ்ரீஸத்குரு சேவை கிடைக்கிறது. அந்த ஸ்ரீஸத்குரு கடாக்ஷத்தால் உண்மை சீடன் ஞானோதயம் பெறுகிறான்.

அந்த சீடனுக்கு விடுதலை அடையும் வரைதான் தாமதம், அதாவது ஞானம் பிரகாசித்தவுடன் பிராப்தம் நசித்துவிடும். எப்படி என்றால் அந்த விடுதலையானது (பிறவித் தளை) கர்மத்தால் ஏற்பட்ட சரீரத்திலிருந்து விடுபடுதல் என

பொருள்படும். இந்த வினையாகிய சரீரம் விழுந்த பின்னும், சஞ்சிதமாயுள்ள வேறு கருமத்தினால் சரீரம் ஏற்படலாமே என்றால் அது இல்லை என்று சுருதி கூறுகிறது. எப்படி என்றால் வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு விசைக்குத்தக்கபடி குறித்த இலக்கை அடையுமாப் போல (அது வரைதான் தாமதம்), சஞ்சிதமோ எய்யப்படாத அம்பு மாதிரி என கொள்க. அந்த சஞ்சிதத்தை ஞானாக்கினி எரித்துவிடும். இன்பம், துன்பம் முதலியவற்றின் அனுபவம் எது வரை இந்த தூலத்தில் காணப்படுகிறதோ அது வரை பிராப்தத்தின் தொடர்பு உள்ளதென கொள்க. பலன் உதிப்பது மூன் வினையை காரணமாக உடையது.

எவ்விடத்தும் வினை உண்டாகாமல் பலன் உண்டாவதில்லை என உணர்க. "தான் பிரம்மம்" என்று சாக்ஷாத்கரித்தால், நூறு கோடி காலம் சேமித்து வைத்த சஞ்சிதம் என்னும் மூன் வினையானது, தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டதும் அக்காரியங்கள் அழிவது போல் ஒழிந்து போகிறது. கனவு காலத்தில் அனுபவிக்கும் புண்ணியமோ, கொடிய பாபமோ விழித்தவுடன் சொர்க்கத்திற்கோ, நரகத்திற்கோ கொண்டு செல்லுமா? ஆகவே தன்னை ஆகாயம் எப்படியோ அப்படி பற்றற்றவனாக்கி விட்டால், தன்னை சாட்சியாக உள்ளவன் என அறிந்து கொண்டால் கருமங்களால் ஒரு போதும் பற்றப்படமாட்டான். தான் கர்த்தா என்ற எண்ணம் இருந்த காலத்தில் செய்த காரியங்கள், அந்த எண்ணம் அழியும்போது அழிந்து விடுகிறது. அதாவது "அகர்த்தா" என்ற பிரம்ம ஞானம்

ஏற்பட்டபின் ஆகாமிய கர்மத்துடன் எந்த சம்பந்தமும் இல்லை என உணர்க. ஆகாயமானது கள் குடத்தில் இருப்பதால், கள் வாசனையுடன் பந்தப்படுவதில்லை. அதுபோல ஆத்மாவானது உடல் உபாதைகளுடன் கூடி இருந்தாலும், அவற்றின் குணங்களால் பந்தப்படுவதில்லை.

ஞானம் உதிப்பதற்கு முன் ஆரம்பித்த பிராப்த கர்மா, பிரம்ம ஞானம் உதித்தாலும் தன் பயனைக் கொடுக்காமல் அழியாது. இது ஒரு இலக்கைக் குறிப்பிட்டு எய்த அம்பைப் போலாகும் என கொள்க. பிராப்தாதீனமான பாப புண்ணிய கர்மாக்கள் அனுபவித்து தீர்ப்பது தூலம். அதில் பந்தப்படாமல் இருப்பது ஆத்மா. எப்படி என்றால் புலி என்ற எண்ணத்தால் எய்யப்பட்ட அம்பு, அது பசு எனக் கண்டாலும் அந்த அம்பு நின்றுவிடாது. இலக்கை முழு வேகத்துடன் அடைந்தே தீரும். பிராப்த கர்மா ஞானிகளுக்கும் வெல்ல முடியாத வலிமை உடையது. எண்ணத்தால்தான் அதை அழிக்க முடியும். சேமித்து வைக்கப்பட்ட முன் வினைக்கும், வருவனவற்றிற்கும் ‘‘ஞானம்’’ என்ற தீயால்தான் அழிவு ஏற்படும். பிரம்மமும் ஜீவனும் ஒன்று என்பதை உறுதிப்படுத்தி, எவன் எப்பொழுதும் நிலை பெற்றிருக்கிறானோ அவனுக்கு அந்த மூன்றும் ( பிராப்தம், ஆகாமியம், சஞ்சிதம் ) எப்பொழுதும் நிச்சயமாக இல்லை. எப்படியென்றால் கனவில் கடித்த தேளின் விஷம் விழித்தவுடன் வேதனை தருவதில்லை.

உலக வாசனையோடு தன்னை சேர்த்து மயமாகி விடாமல், தான் ஆத்ம ஸ்வரூபம் என தனதாத்ம நிஷ்டையில் ஒடுங்கிய

ஞானிக்கு பிராப்தம் உண்டென்று சொல்வதற்கில்லை. காரணம் கனவில் கண்ட பொருள் சம்பந்தம், விழித்த நிலையில் இல்லாததுபோல ஆகும். விழித்துக் கொண்டவன் கனவில் தோன்றிய உடலுடனும், அந்த உடல் அனுபவித்த பொருள்களுடனும் உள்ள நான் என்றும், என்னுடைய பொருள் என்றும் எண்ணுவதை விட்டுவிடுகிறான். அதனால் விழிப்புடன் கூடியவனாக, தான் தானாக இருக்கிறான். அவனுக்கு கனவில் கண்ட பொருள்களை சேர்த்து வைக்க வேண்டுமென்ற ஆசையும் இல்லை, அந்த உலகை ஏற்றுக் கொள்ளுதலும் இல்லை. அங்கு பொய் பொருள்களில் பற்று இருக்குமேயானால் உறக்கம் கலையவில்லை என அர்த்தமாகும். கனவில் கண்ட நிலையில் ஆகாரம் உட் கொள்ளுதலும் கழிதலும் எப்படியோ, அப்படி நனவிலும் விசார விகாரமில்லாமல் இருப்பான். ''தேகமே ஆத்மா'' என்ற நிலையில் பிராப்தமானது சித்திக்கிறது. தேகமே ஆத்மா என்னும் பாவணையை விட்டுவிட்டால் பிராப்தம் மறைந்து விடுகிறது. உடலுக்கும் கூட பிராப்தம் உண்டென்று சொல்வது, அது கற்பணையின் வடிவில் மதி மயக்கமேயாகும். எப்படி என்றால் தேகமே ஆத்மா என்றால் அதற்கு இருப்பு எங்ஙனம்? இறப்பு இல்லாததற்கு பிறப்பு எங்ஙனம்? பிறப்பு இல்லாததற்கு அழிவு எங்ஙனம்? இறப்பு இல்லாததற்கு பிராப்தம் எங்ஙனம்?

திடமான ஞானத்தால் அஞ்ஞான விளைவாகிய பிரபஞ்சத்தை வேருடன் களைத்தெரிந்து உணர்ந்தால் இந்த தேகம் எப்படி இருக்கும்? சந்தேகத்துடன் கூடிய மதி மயங்கிய ஜனங்களை சமாதானப்படுத்துவதற்காக, சுருதியானது வெளி

விவகார போக்கில் பிராப்தத்தைக் கூறுகிறது. விவேகிகளுக்கு தேகம் முதலிய தோற்றம் உண்மையில் இல்லை, அது கற்பனையே. ஆகவே ஞானிகளுக்கு பிரப்தம் இல்லை என்றும் சொல்லலாம். இதில் ஒரு இடத்தில் பிராப்தத்திற்கு வலிமையை கொடுத்து ஞானிகளாலும் வெல்ல முடியாது என கூறுகிறார். ஒரு இடத்தில் ஞானிகளுக்குப் பிராப்தம் இல்லை எனக் கூறுகிறார். இதன் அடிப்படை, எண்ணமே எனக் கொள்க. அதாவது கற்பனையே என கொள்க, அதாவது அறியாமையோடு கூடி இருக்கும் மாந்தருக்கு தம் கற்பனையால் பிராப்தம் உண்டு. அறிவோடு கூடியிருக்கும் ஞானிக்கு கற்பனையோடு கூடிய பிராப்தம் இல்லை.

**எல்லாம் நீ!**

## 30. ஆத்மானுபவம்

1. ஆசைகள் அற்றவனாயும், விஷய நுகர்ச்சிகளை அறவே துறந்தவனாயும், புறக்கரணங்களை அடக்கியவனாயும், ஞானப்பயிற்சியில் விடாமுயற்சியை உடையவனாயும், மஹான்களின் தொடர்பால் உயர்ந்த தத்துவத்தை நன்கு உணர்ந்தவனாயும் உள்ளவனுக்கு ஆத்மானுபவம் பெருகும்.

௨. சர்வசதா ஆனந்தத்தையே அனுபவிப்பவனாயும், கற்பனையால் செய்யப்பட்ட மதி மயக்கத்தை தள்ளியவனாயும், அஞ்ஞானத்திலிருந்து விழித்துக் கொண்டவனாயும், தெளிவான ஞானக்கண்ணால் ஆத்ம தத்துவத்தை பார்த்தவனாயும், சந்தேக பான்மை அணுஅளவும் இல்லாதவனாயும் தன்னைத்தான் அறிந்தவனுக்கு ஆத்மானுபவம் பெருகும்.

௩. ஸ்ரீஸத்குருநாதனிடம் இருந்து கிரஹிக்கப்பட்டதை, நிச்சய புத்தியால் தெளிந்து அஞ்ஞான தளைகளினின்று விடுபட்டவனாய் சத் சித் ஆனந்த வடிவான ஆத்மா, தான் என அறிந்து, குரு உபதேசத்தால் சிரவண, மனன, நிதித்யாசனத்தால் தன் நிலை பெற்றவன் ஆத்மானுபவம் பெறுகிறான்.

௪. பிரம்மம் கேள்வியும் படிப்புமாக இராமல், தொட்டு அனுபவிக்கும் படியாக அபரோக்ஷானுபூதியாய்

விளங்குகிறது. அதாவது குரு உபதேசத்தால் கிடைக்கும் ஆனந்தம் பரோக்ஷ ஞானம் ஆகிறது. அந்த ஞானத் தெளிவில் அனுபவிக்கும் சமாதி அனுபவம் (தொட்டு உணர்தல்) அபரோக்ஷ ஞானமாகும். சொந்த அனுபவத்தால் அகண்டானந்த ஆத்மாவாகிய தன்னைத் தானே உணர்ந்து அனுபூதி நிலை கூடி, துவித பாவனை ஏதும் இல்லாத ஆனந்தமாய் ஒருவன் விளங்க வேண்டும். இதுவே ஆத்மானுபவம்.

**எல்லாம் நீ!**

# 31. ஞான விழிப்பு

சிறிது காலம் மனதை பரப்பிரம்மத்தில் நிறுத்தி, அந்த பரமானந்த நிலையிலிருந்து பின்பு எழுந்து இந்த வார்த்தையைக் கூறுகிறான் உண்மை சீடன்.

பிரம்மமும் ஆத்மாவும் ஒன்றேயாக, ஆகி விட்டபோது அங்கு புத்தியைக் காணோம். செயலின் வேகம் குறைந்து விட்டது. அது, இது என நேராக ஒன்றும் காணப்படவில்லை. ஜகத் பொருள்களை எப்படிப்பட்டதென்றும் அறிய முடியவில்லை. அந்நிலையில் பொருள்களின் குணம் அறிய முடியவில்லை. அளவும் பிரமாணமும் தோற்றவில்லை.

சொல்லால் கூறுவதற்கு இயலவில்லை. மனதால் நினைப்பதற்கும் முடியவில்லை. சமுத்திரத்தின் ஆழத்தை அறியச் சென்ற உப்புப் பதுமை நிலையாகியது. இந்த உலகத்தை சற்று முன் இருப்பு உடையது போல் கண்டோம். இப்பொழுது எங்கே போயிற்று? அல்லது யாரும் கொண்டு போய் விட்டார்களா? அல்லது எங்கு மறைந்தது? இது என்ன ஆச்சர்யமாக இருக்கிறதே? அளவு கடந்த ஆனந்த மயமாகிய சமுத்திரமே தோற்றுகிறது. இந்த பிரம்மமாகிய சமுத்திரத்தை, சமுத்திரம் என உணராமல் உலகமாக உணர்ந்தோமே. என்ன மதியீனம்? இந்த சமுத்திரத்தில் எது கொள்ளத்தக்கது? எது தள்ளத்தக்கது? எது வேறானது? எது ஒன்றானது? எது

ஒன்றையும் நாம் காணவில்லை, கேட்கவில்லை, நாம் நாமாகவே எப்பொழுதும் ஆனந்த வடிவமாகவே இருக்கிறோம்.

பற்றற்றவரும், சாதுக்களில் சிறந்தவரும், சர்வசதா ஆனந்த வடிவானவரும், எல்லையற்ற கருணை உடையவரும், கங்கு கரை இல்லாத கடல் போன்றவரும், ஸ்ரீமஹாத்மாவாகியும் இருக்கும் ஸ்ரீஸத்குரு தேவா! உமது திருவடிகளை நமஸ்கரிக்கிறோம்.

ஹே குருதேவா! உமது கடைக்கண் பார்வையாகிய குளிர்ச்சியான சந்திர பிரகாசத்தால் பிறவியாகிய கடும் வெய்யிலின் சிரமம் தீர்ந்தோம். அளவு கடந்த ஆனந்த வடிவினதும், பெருமை வாய்ந்ததும், அழிவற்றதுமான ஆத்மானந்தத்தை உமது கிருபையால் ஓர் நொடிப் பொழுதில் அடைந்தோம். நான் எதையும் செய்பவனுமல்லன். எதையும் அனுபவிப்பவனுமல்லன். நான் மாறுதலற்றவன், எந்த தொடர்புமற்றவன், நான் பரிசுத்தன், அறிவு வடிவானவன், என்றும் உள்ளதாயும், எங்கும் நிறைந்ததாயும் பரிபூரணமானோம். விஷ்ணு, பிரம்மா, சிவன், மஹேஸ்வரன், சதாசிவம் ஆகிய சகலமும் நானே, எல்லோருடைய அந்தர்யாமியும் நான், அனைத்துக்கும் சாக்ஷி நான். என்னை ஆள்பவன் நான். எல்லா பிராணிகளிடத்தும் நான், உள்ளும் புறமும் நான். பகுக்கப்படாமல் கற்பனையேதும் இன்றி இருக்கும் காலத்தில் எவ்வாறு கல்பம், வருஷம், அயனம், ருது முதலியன கற்பனை செய்யப்படுகிறதோ, அவ்வாறே உலக ஜனங்களால் கற்பனையின் தோற்றத்தால் உலக தூல பாவனைகள் எம்மிடம் கற்பிக்கப்பட்டுள்ளன. ஆகாயத்தை போல் எதையும் பற்றாதபடி வெகுதூரம் சென்றவன், சூரியனைப் போல்

பிரகாசத்தைப் பெறும் பொருள்களைக் காட்டிலும் வேறானவன். மலையைப் போல சற்றும் அசையாதவன், சமுத்திரத்தைப் போல கரையில்லாதவன். தூலத்திற்கு உபாதையானது வருகிறது, அதுவே போகிறது, அதுவே செய்கிறது, அதுவே செயல்களை செய்கிறது. அதுவே பலனை அனுபவிக்கிறது. அதுவே கிழத்தனத்தை அடைகிறது.

அதுவே மறைகிறது. இவைகளை அசையாத பர்வதம் போல் சாட்சியாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். எங்ஙனம் தச்சன் ஆயுதங்களை உபயோகிக்கும் போது தச்சனாகவும், ஆயுதம் அற்ற நிலையில் சாதாரண மனிதனாகவும் இருக்கிறானோ, அதே நிலையில் இந்த ஜீவாத்மா புத்தியின் தொடர்பால் கர்த்தாவாகவும், தொடர்பை விட்ட காலத்தில் அகர்த்தாவாகவும் இரண்டென்ற நிலையில் இருக்கிறான். சராச்சரத்தை அனுசரித்து பிறப்பும் இறப்பும் உள்ளது. அங்ஙனம் கூறியது உபசார வசனமே. பிறப்பு இறப்பு என்ற பாவனை, சரீர பாவனையால் ஏற்பட்டது. ஆத்மாவுக்குப் பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. இந்திரியங்களில்லாதவனாயும், மனம் இல்லாதவனாயும், மாறுபாடற்றவனாயும், ரூபமற்றவனாயும், அளவு கடந்த இன்பத்தை அனுபவிப்பவனாயும் உள்ள எமக்கு பாவ புண்ணியம் எங்கிருந்து வரும்?

வேதமும் கூட புண்ணியமும், பாபமும் தொடரப்படாதவன் எனக் கூறவில்லையா? சூரியனுக்கு செயல்களின் தன்மையால் எப்படி பற்றவில்லயோ, அக்கினிக்கு எரிக்கும் தன்மையை தவிர குணத்தை எப்படி பற்றவில்லையோ, பழுதையில் (கயிறு) வந்த சர்ப்பம் எப்படி அந்த பழுதையை பற்றவில்லையோ, அப்படியே அறிவுமயமான எமக்கு எந்தப் பற்றுதலும் இல்லை.

செய்பவனாகவோ, செய்விப்பவனாகவோ, பார்ப்பவனாகவோ, பார்க்கப்படுபவனாகவோ, அனுபவிப்பவனாகவோ, அனுபவிக்கச் செய்பவனாகவோ நான் இல்லை. ஜலத்தில் அசையும் சூரியனைப் போல, பிரதி பிம்பத்தின் அசைவை சூரியன் அசைகிறான் என்று சொல்லும் அறிவு மழுங்கியவர்கள் தன்னை கர்த்தா என்றும் போக்தா என்றும், கற்பனை செய்துகொண்டு, ஐயோ! நான் கெட்டுப் போனேனே என அறியாமையால் உளறுகிறார்கள்.

ஜலத்திலோ, தரையிலோ இந்த உடல் விழுந்து போகட்டும். கள் குடத்தின் குணத்தால் அதனுள் உள்ள ஆகாயம் எப்படி குண சம்பந்தப்படுவதில்லையோ அப்படி இந்த உடலுக்கும் எமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. பிரகிருதியின் மாறுதல்கள் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் கோடியாக இருக்கட்டும், ஆகாயத்தை மேகம் தொடாதது போல் நாம் பந்தப்படமாட்டோம்.

ஹே குரு மஹாராஜ்! இந்த ஆத்ம ஒளியால் அனைத்தும் ஆளும் தாங்களுடைய கிருபை என்னும் மஹாலக்ஷ்மியின் திருஅருளால் எம்மால் அடையப்பட்டது. குருதேவா! தாங்கள் கிருபையால் நரை, திரை, மூப்பு, சாக்காடு இவைகளைக் கடந்தோம். அஞ்ஞான இருளில் இருந்து எம்மைக் காத்தருளினீர். ஹே குருதேவா! உமக்கு நமஸ்காரம், ஸத்தாக விளங்கும் உமக்கு நமஸ்காரம், எது இந்த உலக வடிவில் பிரகாசிக்கிறதோ அந்த விளக்க முடியாத பேரொளியின் வடிவினரான உமக்கு நமஸ்காரம்.

**எல்லாம் நீ!**

# 32. உபதேச முடிவு

குழந்தாய்!

ஸ்ரீமஹாத்மாவாகிய அந்த ஸ்ரீஸத்குருதேவர் தம் உண்மை சிஷ்யனைப் பார்த்து சொல்வதாவது.

ஹே ஞானக் குழந்தாய்!

எல்லா நிலைகளிலும் அமைதியான மனதுடன் தனதாத்ம உணர்ச்சியாக ஸ்ரீபிரம்மமே நிறைந்திருக்கிறதென்று ஆத்ம திருஷ்டியால் பார்ப்பாயாக. ஊனக் கண் படைத்தவர்களுக்கு எல்லாப் பக்கங்களிலும் உருவத்தைத் தவிர வேறு என்ன காணப்படுகிறது? நாமம் தோற்றப்படுகிறதா? இல்லையே அது உன் கற்பனையே? குணம் தோற்றப்படுகிறதா? இல்லையே! அது உன் மனோ விகாரமே. பசி தோற்றப்படுகிறதா? இல்லையே! அது உனது தாபமே. இதய தாபத்தின் வெப்பத்தால் ஓர் உபாதை, அது பசியாக தோற்றுகிறது.

இச்சை தோற்றப்படுகிறதா? இல்லையே! அழகு என்றும், வனப்பு என்றும், வசீகரம் என்றும், கவர்ச்சி என்றும் நீயே உன் கற்பனையின் மூலம் அதற்கு ஊட்டி, அந்த அழகில் மயங்கி விட்டில் பூச்சி போல ஆகின்றாயே? இவற்றை உனது அகக்கண்ணால் (ஞானக் கண்) பார்த்து புத்தி விகாரத்திற்கு இடம் கொடாமல், சத்தாகிய பிரம்மமாக பார்த்தால் அங்கு உன்னையன்றி ஏது உளது?

ஒப்பற்ற ஆனந்த சுவையின் அனுபவத்தை விட்டுவிட்டு ஆனந்த சூன்யமான பொருள்பற்று உனக்கேன்? கனவுபோல் பொய்யான உலகப் பொருளில் கொஞ்சமும் இச்சை வைக்காதே. போதும் என முடித்து விடு.

குழந்தாய்!

எல்லாவற்றிலும் தன்னையே பார்! தன்னையன்றி அன்னியம் இல்லை. எல்லாவற்றிலும் தன்னையே பார்ப்பவனாயும், இரண்டற்ற தன்னையே சிந்தித்தவனாயும், ஆத்மானந்த அனுபவமாக இருந்துகொண்டு உன் தூலத்திற்கு ஏற்பட்ட காலத்தை கழிப்பாயாக.

கற்பனை கடந்ததும், அளவு கடந்ததும், அறிவு வடிவானதுமான ஆத்மாவில் உன் விபரீத புத்தியால் சிந்திக்காதே! ஆகாயத்தில் ஓர் நகரத்தை சிருஷ்டிப்பது போல், உன் மனோமய கற்பனைகளை கொண்டு உன் வாடகை வீட்டையும் (தூலம்), கற்பனை நகரத்தையும் (உலகம், அதன் பொருள்கள்) விசாரணை பண்ணாதே. **பொய்யான விபரீத கற்பனைகளுக்கு காரணமான புத்திக்கு, சிறந்த அமைதி கொடுப்பது மௌனமாகும்.**

உண்மையான ஞானி நடக்கும்போதும், நிற்கும்போதும், உண்ணும்போதும், உடுத்தும்போதும், படுக்கும்போதும், இருக்கும்போதும் எந்த நிலைகளிலும் அதன் தோற்றம் இருப்பு மறைவு இவைகளில் மயங்காமல் அதன் சுகதுக்கத்தை சட்டை செய்யாமல் சதானந்தமாக இருப்பான். இந்த ஆத்மா

எப்பொழுதும் உணரக்கூடியதாய் சத்தாக இருக்கிறது. அதை அறியும்முறை உண்மையாகும்போது, தானே பிரகாசிக்கிறது.

ஒரு குறிப்பிட்ட இடத்தையோ அல்லது வேறு காலத்தையோ **அது** வேண்டுவதில்லை. வேதமும், சாஸ்திரமும், புராணங்களும் எல்லாப் பொருள்களுக்கும் எதனால் அர்த்தமும், சுவையும் உண்டாகின்றனவோ, அந்த அறிவு சொரூபமாகிய ஆத்மாவை வேறு எது பிரகாசிக்கப் பண்ணும்? இந்த ஆத்மா, தானே சுயஞ்ஜோதி மயமானது. அளவில்லா சக்தி உடையது. ஊகித்தறிய முடியாதது. ஆனால் எல்லோர்க்கும் அனுபவ ரூபமானது. **இப்படி அறிந்த உடன், அறிந்தவன் அந்த க்ஷணமே அதுவாகவே ஆகிறான்.** இந்த ஆத்மா, இந்திரிய உணர்ச்சிகளால் துன்பப்படுவதில்லை, மகிழ்வதில்லை, பற்றப்படுவதில்லை, விருப்பு வெறுப்புக் கொள்வதில்லை. இதை அறிந்தவன் எல்லையில்லா ஆனந்தத்தால் திருப்தி அடைந்தவனாய் தன்னிடத்தில் தானே விளையாடுகிறான். ஆத்மாவிடத்திலேயே விளையாடுபவனாயும் அதிலே ஆனந்திப்பவனாயும் அதையே கிரிகையாக உடையவனாயும் இவனே பிரம்ம ஞானி என **முண்டக உபநிஷத்** கூறுகிறது.

சிறுவன் தன் பசியையும் மறந்து, உடல் உபாதையையும் மறந்து, விளையாட்டுப் பொருள்களில் விளையாடுகிறான். அது போல் ஞானி நான், எனது என்ற எண்ணம் அற்றவனாய் சுகமாக விளையாடுகிறான். ஞானிக்கு கவலை என்பதில்லை, காரணம் தூலத்தையும், தூல இயக்கத்தையும் முறையே நான் என்றும் என்னுடையது என்று அவன் கொள்வதில்லை. தன்னை

குறைவுபடுத்திக் கொள்வதில்லை, எதையும் போதும் என நிறைவு படுத்திக் கொள்கிறான். நிறைந்த மனம் எதையும் விரும்புவதில்லை. நிறைந்த மனம் நிலைபெறும்போது மனம் மஹத்தாகி விடுகிறது. அந்நிலையில் கிடைக்கும் உணவை பிக்ஷையாக ஏற்று மானாபிமானம் அற்ற நிலையில், சுவை உற்றதா, சுவை அற்றதா என ருசியை உணராமல், அல்ப சொல்பம் பாராமல் உண்கிறான். வானமே கூரை, பூமியே படுக்கை, கிடைக்கும் துணியே ஆடை, யதேச்சையாய் லபிக்கும் உணவே ஆகாரம், கிடைக்கும் ஜலமே பானம், இவை ஒன்றிலும் உனக்கு சிரத்தை இல்லையானாலும் உன் தூல ஸம்ரக்ஷணார்த்தம் தானே நடைபெறும். அதை ஸ்ரீபரம்பொருளின் மாயாகாரியம் கவனித்துக் கொள்ளும்.

1) ஞானி இந்த உடல் மீது அபிமானம் இல்லாமல் ஏற்றுக் கொண்டு மற்ற ஜீவர்களின் இஷ்டப்படி தன்னை நாடி வரும் விஷயங்கள் எல்லாவற்றையும் விபரம் அறியாக் குழந்தையைப் போல் விளையாட்டார்த்தமாக அனுபவிக்கிறான். அவன் வெளி உலகங்களால் கண்டு கொள்ள முடியாதபடி தன்னை மூடிக்கொள்கிறான். வெளிப்பொருள்களில் பற்றில்லாதவனாயும், கிடைத்தால் உடுப்பது, இல்லையானால் அவதூதனாயும், தனதாத்மாவில் நிலை பெற்றவனாய், அறியாக் குழந்தையைப் போலும், பித்தனைப் போலும், பேய் பிடித்தவனைப் போலும், உன்மத்தனைப் போலும், விழிகண் குருடுபோலும், பிரேதத்தை போலும் சஞ்சரிப்பான்.

௨) ஞானியானவன் ஒருபோது மூடனைப்போலும், ஒருபோது வித்வானைப்போலும், ஒருபோது அரசனைப்போலும், ஒருபோது மதியிழந்த ஆண்டியைப்போலும், ஒருபோது மலைப்பாம்பைப் போல் அசைவற்று கிடப்பவனாயும், ஒருபோது யாவராலும் பூஜிக்கப்பட்டவனாயும், ஒருபோது அவமதிக்கப்பட்டவனாயும், ஒருபோது யாவராலும் அறியப்படாதவனாயும், சர்வசதா ஆனந்தத்தில் ரமிப்பவனாயும் சஞ்சரிக்கிறான்.

௩) பொன்பொருள் இல்லாதவனாயும், பொறுமை சாந்தம் உள்ளவனாயும், பிறர் துணை இல்லாதவனாயும், தனக்குத் தானே துணைவனாயும், போக போக்கியம் அனுபவியாதவனாயும், தனதாத்ம சுகத்தை அனுபவிப்பவனாயும் பிறர் இடத்தே சத்ருவைக் காணாதவனாயும், தன்னிடம் உள்ள குணமாகிய சத்ருவை வென்றவனாயும், எதிலும் திருப்தி உடையவனாயும் ஒரு ஞானி சஞ்சரிக்கிறான்.

௪) செயல்களில் ஈடுபட்டவனாயும், எதையும் செய்யாதவனாயும், பிராப்த பலனை அனுபவிப்பவனாயும், அனுபவிக்கும் உடலை மறந்தவனாயும், உடலில் உறைபவனாயும், அந்த உடல் தானல்லாதவனாயும், விவகார அளவுக்கு உட்பட்டவனாயும், அளவில்லாமல் எங்கும் நிறைந்தவனாயும், சப்தத்தை கிரஹியாதவனாயும், தன் சப்தத்தை அடக்கினவனாயும், நன்மை, தீமை, விருப்பு, வெறுப்பு, சுக துக்கம் இவைகளில் சமபான்மை உடையவனாயும் ஒரு ஞானி சஞ்சரிக்கிறான்.

5) தூலமான சரீரத்தில் நான், எனது என்ற சம்பந்தம் உடையவனுக்கும், அபிமான அஹங்காரம் உடையவனுக்குமே சுக துக்கம் பிறவித்தனை சம்பவிக்கும். இவைகளை நாசம் செய்து சத்தாகிய ஆத்மாவாக விளங்குபவன், என்றும் சத்தாகவே விளங்குவான். ராகு என்னும் நிழலாகிய இருளினால் விழுங்கப்பட்டதைப் போல் சூரியன் தோற்றினாலும், சூரியன் பிரகாசம் குறைவதில்லை, அது போல் ஞானி தூலப் பிரவர்த்தியால் தன்னை மறைத்துக் கொண்டாலும், உண்மை அறிவு இல்லாத ஜனங்களுக்கு சரீர போகியாகவே காணப்படுவான். இந்த ஜீவன்முக்தனான ஞானி! தம் தூலத்தை பாம்பின் சட்டையைப் போல் போட்டு மறைந்துக் கொண்டு சமயம் வரும்போதும் தன் உவகையினாலும் கழற்றி விடுகிறான்.

6) **ப்ருகதாரண்ய உபநிஷத்** சொல்வதாவது - எங்ஙனம் பாம்பு தன் சட்டையை புற்றின் அருகே கழற்றி போட்டு விட்டு சென்றுவிடுமோ, அதே நிலையில் ஒரு ஞானி தம் தூலத்தையும் கழற்றிப் போட்டுவிட்டு லயமாகிறான்.

7) ஒரு கட்டையானது, நீரோட்டத்தில் அகப்பட்டு உயர்ந்த இடத்திற்கோ, தாழ்ந்த இடத்திற்கோ கொண்டு போகப்படுவதைப் போல, இந்த தேகமானது கால ஓட்டத்தால் நிகழும் அனுபவங்களில் பூர்வ கர்மத்தால் கொண்டு செல்லப்படுகிறது. ஜீவன்முக்தனுடைய தேகம் பிராப்த கர்மத்தால் ஏற்பட்ட வாசனைகளின் மூலம், சம்சாரத்தில் கட்டுண்டது போல் போகபோக்கியப் பொருள்களிடையே சஞ்சரிக்கிறது.

ஆனால் அவனோ இங்கு மௌனமாய், சாட்சியாய், சக்கரத்தின் அச்சாணியைப் போல் பந்தமில்லாமல் பார்த்துக் கொண்டிருக்கிறான். இந்த ஞானி பற்றின்றி பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில், இந்திரியங்களால் விஷயங்களை நடத்தும் கூட்டுறவை விலக்குவதும் இல்லை. அதை நோக்குவதும் இல்லை. அவன் பரிபூரணானந்தமாகவே இருக்கிறான். வேண்டுதலும் வேண்டாமையும் அற்று, எவன் தனதாத்மாவில் சர்வ சதா ரமித்திருக்கிறானோ அவனே சிறந்த ஞானி.

ஒரு நடிகன், தான் வேஷம் போட்டுக் கொண்டாலும் இல்லாவிட்டாலும் எப்படி புருஷனாகவே இருக்கிறானோ, அப்படியே பிரம்ம ஞானியும் சரீரியாய் கர்மாவைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், அசரீரியாய் கர்மா அற்ற நிலையில் இருந்தாலும் அவன் ஏகனாக ஆனந்தமாக இருக்கிறான். பிரம்ம மயமாகிவிட்ட ஞானிக்கு அவன் சரீரம் உலர்ந்த இலையைப் போல் ஆகும், அது எங்கு விழுந்தாலும் எந்த காற்றில் அடித்துச் சென்றாலும் அதை அவன் உணர்வதில்லை, விசாரிப்பதில்லை. சத் சொரூபமான பிரம்மத்தில் எப்பொழுதும் ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஞானிக்கு தோல், மாமிசம், மலம், மூத்திரம், சீழ் நிறைந்த பிண்டமாகிய தூலத்தை விடுவதற்கு இடம், காலம், தகுதி இவைகளைப் பற்றிய நோக்கம் இல்லை.

உலகத்தை விடுவது மோக்ஷமல்ல. உலக பொருள்களை விடுவது மோக்ஷமல்ல, உடலை விடுவது மோக்ஷமல்ல. பந்தத்தை விடுவது மோக்ஷமல்ல, தண்டம், கமண்டலத்தை விடுவது

மோக்ஷமல்ல. ஜடை தரிப்பதோ, மொட்டை அடிப்பதோ, காஷாயம், உருத்திராக்ஷம் அணிவதோ மோக்ஷமல்ல. இவை அனைத்தும் எதனால் இயங்குகிறதோ அந்த இருதய முடிச்சை அவிழ்த்தலே மோக்ஷம். ஒரு ஓடையிலோ, ஒரு நதியிலோ, ஒரு சில க்ஷேத்திரத்திலோ, ஒரு நாற்சந்தியிலோ ஒரு இலை விழுமேயானால் அந்த மரத்திற்கு நன்மையோ தீமையோ கிடையாது. ஒரு மரத்தின் இலையும், பூவும், பழமும் அழிவது போல் உடலின் இந்திரியம், பிராணன், புத்தி ஆகியவற்றின் அழிவு ஆனந்தத்தின் அம்சமாகும். அதுவோ மரத்தைப் போல இருக்கிறது.

**யாக்யவல்யர்** தன் மனைவி மைத்திரேயிக்கு சொன்னதாவது:- ப்ரியே! எங்ஙனம் உப்புக்கட்டியை நீரில் போட்டால் அது எப்படி கரைந்து விடுகிறதோ, அதை எப்படி எடுக்க முடிவதில்லையோ, ஆனால் அந்த ஜலத்தை எந்த இடத்தில் எடுத்தாலும் அது எங்ஙனம் உப்பாகவே இருக்குமோ, அதைப்போல மஹா பூதம் என்னும் ஆத்மா விஞ்ஞான மயமாகவே உள்ளது. பஞ்சபூதங்களின் செயற்கையால் ஆன சகலமும் அதன் மயமாகவே ஆனது. மறைந்து போன பின் தடயமே இல்லை என்று சொல்ல, அந்த தடயம் என்ன என கேட்க அதாவது உபாதிகள்தான் அழிந்து மயமாயினவே தவிர, என்றும் உள்ள ஆத்மாவிற்கு அழிவில்லை என்று கூறினார்.

இந்த ஆத்மா அழிவில்லாதது என்ற சுருதி வாக்கியம், அழியும் பொருள்களிடையேயும் மாறுபடும் பொருள்களிடையேயும், இந்த ஆத்மா அழியாத் தன்மையது என கூறினார்.

காணப்படும் தோற்றம் சகலமும் எரிக்கப்பட்டால் மண்ணாகவே ஆகி விடுகிறது. அதைப் போலவே உடலைச் சார்ந்த அதாவது அதன் இயக்கத்திற்குக் காரணமான இந்திரியம், பிராணன், மனது ஆகியவை அனைத்தும் ஞானாக்கினியால் எரிக்கப்பட்டால் அதன் தன்மையும் ஆத்மாவைப் பற்றாது. எங்கும் நிறைந்த ஸ்ரீபரமாத்மா என்றும் உள்ளது போல் இருக்கும். குடம் உடைந்தால் அதில் இருந்த ஆகாயம் ஆகாயமாகவே இருக்கிறது. அது போல் தூலமும், அதன் உபாதியும், அழிந்தாலும் பிரம்ம ஞானி, தான் பிரம்மமாகவே இருக்கிறான். ஒரு முறை இந்த பிறவியின் தளை அறுந்தால் மறுமுறை அந்த பிறவியின் தளை பற்றுவதில்லை. எப்படி என்றால் அவித்தையின் உதவியால் சட்டையாகிய தூலம் அது பிறந்த இடமாகிய மாயையில் மறைந்தால் திரும்ப உருப்பெறாது.

மறைவு ஏற்படும்போது பந்தமும், அது விலகும்போது மோக்ஷமும் பேசப்படுகிறது. பிரம்மத்திற்கு மறைவு என்பது இல்லை. பிரம்மத்தைத் தவிர வேறொன்றும் இல்லை. பிரம்மம் எப்பொழுதும் மறைக்கப்படாதது. அப்படி மறைவு இருக்குமேயானால் அத்வைதத்திற்கு அழிவு ஏற்படும். துவைதத்தை பிரம்மத்திற்குப் புறம்பாக இரண்டாவது பொருள் உண்டு என்பதை ஒப்புக் கொள்ள சகிக்காது. பந்தமும் மோக்ஷமும் புத்தியின் குணங்கள். மூடர்கள் உண்மைப் பொருளான ஆத்மாவிடம் இந்த பொய்யான கற்பனையைச் செய்கிறார்கள். மேகத்தால் சூரியனை மறைக்கும் மறைப்பை

உண்மையாக கற்பிப்பது போல இவை பேசப்படுகின்றன. ஆத்மாவிடம் பந்தமும், மோக்ஷமும் உண்டு என்ற எண்ணம் எதுவோ, அல்லது இல்லை என்பது எதுவோ, இவை இரண்டும் புத்தியின் குணங்கள். நித்திய வஸ்துவான ஆத்மாவுடையதாகாது. ஆகையால் மாயையால் கற்பிக்கப்பட்ட பந்தமும், மோக்ஷமும் ஆத்மாவிடம் இல்லை. ஆகவே இறப்பும் இல்லை, பிறப்பும் இல்லை, சாதனையும் இல்லை, சாதனமும் இல்லை, முக்தியை நாடுபவனும் இல்லை, முக்தி எய்தியவனும் இல்லை. இதுவே பரமார்த்தீக ஸத்தியம். **இதுவே மாண்டூக்ய உபநிஷத்தின் வாசகம்.**

குழந்தைகளே!

இந்த விதமாக ஸ்ரீகுருதேவரானவர், தம் சீடனை கலிதோஷமற்றவனாயும், சகல ஆசைகளினின்றும் விடுபட்டவனாயும், மோக்ஷ ஆனந்தத்தில் ரமித்தவனாயும் தம் சொந்தப் பிள்ளையாகவும் ஆக்கி பிரம்மானந்தத்தில் ரமிக்கச் செய்தார். ஸ்ரீகுருதேவர் வாக்கியத்தை தம் லக்ஷியமாக கொண்ட உண்மை சீடன் ஸ்ரீஸத்குரு திருவடியில் நமஸ்கரித்து சென்னி சூடி எழுந்து நின்றான். ஸ்ரீகுருதேவர் தம் உண்மை சீடனை ஆரத்தழுவி உச்சிமோந்து ஆசியுடன் தன்னுள் ஐக்கியப்படுத்தினார். அவனும் அவருள் கலந்து லயமானான்.

**எல்லாம் நீ!**

## 33. பூர்த்தி

இங்ஙனம் ஸ்ரீஸத்குருநாதரால் ஸ்ரீஸத்சீடனுக்கு ஸ்ரீஆத்ம லக்ஷணம் பொருந்தி ஞான விழிப்பு எய்தியது போல் இதை உணர்ந்து கரைந்தவர்களுக்கும் இந்நிலை எய்தும் என உணர்க.

**எல்லாம் நீ!**

## 34. நூலின் சிறப்பு

ஜலத்தை விரும்பி பாலைவனத்தில் மயங்கி அலையும் ஜனங்களுக்கு ஜலம் எப்படி முக்கியமோ அதுபோல, ஸம்சார மார்க்கத்தில் தாபத்திரயமென்னும் வெப்பத்தால் தவிப்பவர்களுக்கு இந்த ஞானரஸம், அமிர்த தாரை போல் வருஷித்து குளிர்ச்சியை உண்டுபண்ணி, ஆழ்ந்த அமைதியையும், மிகுந்த சாந்தத்தையும், மஹாமௌனத்தையும் அருளும்.

இங்ஙனம் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாச்சார்ய கோவிந்த பகவத் பூஜ்யபாத சிஷ்யரான **ஸ்ரீமத் சங்கரபகவத்பாதர்** அருளிய **ஸ்ரீ விவேக சூடாமணி** என்னும் நூல் முற்றுப்பெற்றது.

**எல்லாம் நீ!**

பாபா.




Adobe of Love

You are Everything!